பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 02 | 05 மே 2018 | விதி : 99




முள்ளிவாய்க்கால் நினைவு பங்குபோடும் பண்டமல்ல




பலியாக்கப்படும் ஊடகவியலாளர்கள்



அபாயா அரசியல்



ஆனைக்கோட்டை

# நினைவழியா நாட்கள்



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'






சுராஜின் இயக்கத்தில் விமல் நடிக்கவுள்ள படத்தில் வடிவேலுவும் நடிக்கவள்ளார்.

முழுக்க முழுக்க நகைச்சுவைப் படமாக உருவாகும் இப்படத்தில் விமலும் வடிவேலுவும் பொலிஸ்காரர்களாக நடிக்கிறார்களாம்.

மணிரத்தினத்தின் 'செக்கச் சிவந்த வானம்' படத்தில் நடிக்கிறார் அதிதி ராவ்.

தமிழ், தெலுங்கில் தொடர்ந்து நடித்து வரும் அவர், "எனது சம்பளத்தை உயர்த்தி விட்டேன் என சிலர் கூறுகின்றனர். அதுபற்றி தயாரிப்பாளர்கள்தான் கவலைப்பட வேண்டும். ஏன் இவர்கள் கவலைப்படுகிறார்கள்? பணத்தை விட நல்ல படங்கள்தான் எனக்கு முக்கியம்.

"கவர்ச்சி வேடங்கள் எனக்குப் பொருந்தாது. குடும்பப் பாங்கான வேடங்களே பொருந்தும். பொலிவூட்டிலும் அவ்வாறான வேடங்களிலேயே அதிகம் நடித்துள்ளேன்" எனக் கூறியுள்ளார்.



விசுவாசம் படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகவிருந்த நிலையில், பணிப்புறக்கணிப்பு தொடங்கியிருந்தது. 45 நாள்கள் நீடித்த இந்தப் பணிப்புறக்கணிப்பால் படப்பிடிப்பு நடக்கவில்லை.

இந்நிலையில் இந்தப் படத்தை முடிக்க இடைவெளியின்றி நடித்துக் கொடுக்க அஜித் சம்மதம் தெரிவித்திருக்கிறார். கிராமக் கதை கொண்ட இந்தப் படத்தில் பழைய அஜித்தை பார்க்கலாம் என்கிறார் இயக்குநர் சிறுத்தை சிவா.

காட்டே
நாயகியா
வருடத்து
அறிவிக்க
வரலட்சு
ஆகியோ
நடிக்கின்

ஓவிய
ஒப்பந்த
இலட்சம
சம்பளம
இப்போ
வாங்குகி
அவர் க
எனக் கூ

ஆன
பிரச்சின
ஓவியா
குறைக்க
விலகின
தரப்பு.



'கா' ப
காட்டுயி
எடுப்பவ
ஆன்ட்ரி

நாயகி
கொண்டு
படம் க்ள
கதையா

நான்கு
உருவாகு
அந்தமா
படமாகி
இதனின
நடித்த வ
வெளிய

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 02 | 05 மே 2018 | விதி : 99

# மீண்டும் அமைச்சரவையில் விஜயதாச ராஜபக்ச

1. நயினை நாகபூஷணி அம்மன் கோபுரத்தை மறைத்து பிரமாண்டமான புத்தர் சிலை அமைக்கப்படுமா?
2. வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைகள் நிறுவப்படுமா?
3. யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயத் தடை நிரந்தரமாகுமா?
4. வவுனியா வளாகத்தில் புத்தர்சிலை நிறுவப்படுமா?

விஜயதாச ராஜபக்ச நீதி மற்றும் பௌத்த விவகார அமைச்சராக இருந்தபோது நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் கோபுரத்தை மறைக்கும் வகையில் பிரமாண்டமான புத்தர் சிலை அமைப்பதற்கு அவரால் அடிக்கல் நடப்பட்டதுடன் பெருந்தொகை நிதியும் ஒதுக்கப்பட்டது. எனினும் அது தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் பிரதமர் வடக்கு - கிழக்கில் சில ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுமெனவும், அதற்குப் பெருந்தொகை நிதி ஒதுக்கப் படுமெனவும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளின் நினைவாலயம் அமைக்க நிர்வாகம் அனுமதி வழங்கியது. வேலை ஆரம்பிக் கப்பட்ட சமயத்தில் அந்த முயற்சி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தடுத்து நிறுத் தப்பட்டது.

வவுனியா வளாகத்தில் புத்தர் சிலை அமைக்கும் முயற்சி நிர்வா கத்தால் தடுத்து நிறுத்தப்பட்ட தால் சிங்கள மாணவர்களால் குழப்பம் ஏற்பட்டுக் கல்விச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன.

ஏற்கனவே பதவியிலிருந்து நீக் கப்பட்ட விஜயதாச ராஜபக்ச மீண் டும் உயர்கல்வி கலாசார அமைச்ச ராக நியமிக்கப்பட்டுள்ளார்.

படுமோசமான இனவாதியான இவர் மேற்படி விடயங்களில் மீண்டும் தீவிரமாக ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் கைதிகளின் நீண்ட உண்ணாவிரதப் போராட்டத்தை அடுத்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதி பதி ஒரு குழுவை நியமித்தார். அப்போது நிதியமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ச அரசியல்வாதிகள் என்று எவரு மில்லையெனக்கூறி அடுத்த கட்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி னார்.

அவரையே மீண்டும் மேற்படி அமைச்சுகளுக்கு நியமித்தமை தான் நல்லிணக்கமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

**சுற்றிச் சுற்றி சுப்பனின் கொல்லைக்குள்**

# இலங்கை சிறைகளில் அரசியல் கைதிகள் எவருமில்லை

**- லண்டனில் ஜனாதிபதி**

# அரசியல் கைதிகளை விடுவிப்பதில் ஜனாதிபதியிடம் மாற்றமில்லை

**- வடக்கில் சுமந்திரன்**

'பொதுநலவாய மாநாட்டுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் இலங்கைச் சிறைகளில் எவருமில்லையெனத் தெரிவித்திருந்தார்.

அதேவேளையில் வடக்கில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் தனது எண்ணத்தில் மாற்றமில்லையென ஜனாதிபதி தன்னிடம் கூறியதாகத் தெரிவித்துள்ளார்."

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் அரசியல் கைதிகள் என எவருமில்லையெனவும் காணாமற் ஆக்கப் பட்டோர் விவகாரத்தில் இராணுவ முகாம் களிலோ, சிறைகளிலோ, பொலிஸ் நிலையங் களிலோ எந்தவித இரகசிய முகாம்களும் இல்லையெனவும் அரச சார்பற்ற நிறுவனங் கள் மக்களைத் தூண்டி போராட் டங்களை நடத்திக் குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர் எனவும் தெரி வித்திருந்தார்.

இது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் ஊடகவியலா ளர்களிடம் ஜனாதிபதி அரசியல் கைதிகள் என அழைப்பதில்லையெனவும் பயங் கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்றே கூறுவதுண்டு எனவும் தெரிவித்தார். காணாமற் ஆக்கப் பட்டோர் அலுவலகம் மூலம் காணாமற் ஆக்கப்பட்டோர் விவகாரம் தீர்க்கப்படுமெனக் கூறி அதை த.தே. கூட்டமைப்பின் தலைமை வரவேற்றமை நினைவு கூரத்தக்கது.

இல்லாத அரசியல் கைதிகள் எப்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டவர்களாகப் பிறப்பெடுப்பார்கள் எனவும் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்படாத காணாமல் ஆக்கப்பட்டோரைக் காணா மல் ஆக்கப்பட்டோர் அலுவலக எப்படிக் கண்டுபிடிக்க முடியு மென மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

**சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்!
பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்!
எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது!**

# கானல் நீராகும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமாகிய எம். ஏ. சுமந்திரன் அவர்கள் இரு வாரங்களுக்கு முன் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்கும் தனது எண்ணத்தில் எந்தவித மற்றமுமில்லையெனக் கூறியதாகவும் தெரிவித்தார்.

ஆனால், அண்மையில் வெசாக் தினத்தை முன்னிட்டு 432 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் களவு, மோசடி போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்.

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கிய ஜனாதிபதிக்கு 'அரசியல் கைதிகளை விடுவிக்கும் தனது எண்ணத்தில் மாற்றமில்லை' என்ற வாசகம் நினைவுக்கு வரவில்லை என்பது அதிசயம்தான்.

**அரசியல் கைதிகளின் விடுதலை கானல் நீர்தானா?
கானலை நீரென்றெண்ணி கடுகழியலையும் மான்கள்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

மக்கள் : ஏன் 90களில் ஈராக் மீது தாக்கினீரகள்?
அமெரிக்கா : பயங்கர ஆயுதம் வைத்து இருப்பதாக சந்தேகபட்டோம்.
மக்கள் : ஏன் சிரியா அமைதியை குலைத்தீரகள்?
அமெரிக்கா : அழிவை ஏற்படுத்தும் ஆயுதத்தை வைத்து இருந்தார்கள் என தகவல் கிடைத்தது.
மக்கள் : ஏன் வடகொரியா மீது தாக்கவில்லை?
அமெரிக்கா : லூசாடா நீங்க ? அவன் உண்மையிலையே ஆயுதம் வச்சு இருக்கான்.




குரலை உயர்த்திப் பேசுவது தலைமைத்துவம் அல்ல..!





நாம் பேசத் தொடங்கும் போது மற்றவரின் குரல்கள் அடங்குவது தான் தலைமைத்துவம்..!





ஏன்டா நானே உங்களை பிடிக்க எருமை மாட்டு மேலே ஏறிக்கினு மெதுவாதானே வரேன்...



அதுக்குள்ள நீங்களே ஏன்டா புதுசு புதுசா வண்டி வாங்கி வேகமா வந்து எங்கிட்ட மாட்டறிங்க...?



சைக்கிள் கற்றுக்கொடுக்க அப்பா நம்மிடம் காட்டிய பொறுமையை அவருக்கு நாம் மொபைல் கற்றுக்கொடுப்பதில் காட்டுவதில்லை.



நிமிர்ந்து நிற்பதெல்லாம் பலம் என்றோ..!
வளைந்து கொடுப்பதெல்லாம் பலகீனம் என்றொ..!
முடிவெடுத்து விடாதீர்கள்,
நிமிர்ந்து நிற்கும் வேலை விட,
வளைந்து கொடுக்கும் வில் அம்பு தான் அதிக தூரம் பாயும்..!!

அழுக்காய் இருப்பது அவமானம் இல்லை!




அடுத்தவரை ஏமாற்றி பிழைப்பதே அவமானம்..!!



கை விடுவதில் மிக சிறந்தவர்கள் பெண்கள்..
ஸ்கூட்டியே மட்டும் இல்லை ஆண்களையும் தான்...

பெற்றோர் தனக்கு என்ன வெல்லாம் செய்தார்கள் என்பதை பிள்ளைகள் கடைசிவரை உணர்வதில்லை





அவர்கள் அதை உணரும் போது பெற்றவர்கள் உயிரோடு இருப்பதில்லை பலரது வாழ்வில் இது தான் உண்மை

நான் கூட பேண்ட் தான் கழண்டு கீழ வந்துடிச்சோனு நினைச்சுட்டேன்..

இது செருப்பு டிசைனாம்..





நிமிர்த்த முடியாதது நாய் "வால்" மட்டுமல்ல, சிலரின் நடத்தையையும் குணங்களையும்தான்.!!!

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# நினைவழியா நாட்கள்...!

ஜுலை கறுப்பு மாதம்.

ஆம்...! 1983 ஜுலை மாதம் தென்னிலங்கையில் பற்றிய இனவாத நெருப்பு அங்கு ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தமிழர்களை விரட்டியது. பல நூறு தமிழர்கள் காடையர்களின் வெறிக்குப் பலியாகினர். தமிழ் கன்னியர்கள் பலர் அந்த காம வெறியர்களின் பசிக்கு இரையாகிப் போனார்கள். நட மாட முடியாத முதியவர்களும் ஒன்றுமறியாப் பச்சிளம் குழந்தைகளும் விளாசி எரிந்த தீக்கு இரையாகிப் போனார் கள். பரம்பரை பரம்பரையாக சிறுகச் சிறுகச் சேர்த்த சொத் துக்களை எல்லாம் காடையர்கள் தமதாக்கிக் கொண்டனர். உடுத்த உடையுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விரட் டப்பட்டனர் தமிழர்கள்.

அன்று பற்றிய போர் நெருப்பு 2009 மே மாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஜுலை கறுப்பு மாதம் என்றால் – மே இரத்தத்தில் குளித்த மாதம் – இனவழிப்பு மாதம்.

உரிமை கேட்டுப் போராடிய இனம் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட மாதம் மே. போர் அரக்கனுடன் இயற்கையும் தமிழர்களை வஞ்சித்த மாதம். உணவின்றி பட்டினித் தீயிலும் கொட்டும் மழையிலும் உயிரைக் காக்கத் துடித்தவர்களை ஷெல் மழை கொன்று குவித்தது. அதற்கும் தப்பியவர்களை இராணுவத்தினரின் துப்பாக்கிகள் சுட்டுக் கொல்ல அதற்கும் தப்ப முயன்றவர்களை டாங்கிகள் நசித் துக் கொன்றன. விடுதலைப் புலிகளை யுத்த விதிகளை மீறிக் கொன்று குவித்தது இராணுவம்.

போர் முடிவை எட்டிய இந்த மாதத்தில்தான் அதிகளவான மக்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் சென்றனர். அவ் வாறு சென்றவர்களில் ஒரு தொகையினரை மானபங்கப் படுத்தியும் – உடைகளைக் களைந்து நிர்வாணமாக வருமா றும் – பெண்களை வல்லுறவு செய்தும் பலவித கொடூரங்களை செய்தும் கொன்று குவித்தது இராணுவம். இராணுவத்தின் வெறிச் செயலுக்கும் 1983 இல் தமிழர்கள் மீது தாக்குதல் களை கட்டவிழ்த்த காடையர்களின் செயலுக்கும் இங்கு பேத மறிவது மிகக் கடினம்.

பல ஆயிரம் பேரைக் கொன்று குவித்து ஈற்றில் போர் முடிவுக்கு வந்தபோது உலகம் தனது கண்களை இறுக மூடிக் கொண்டது. தாயகத்தில் இருந்தவர்கள் எதையும் செய்யத் திராணியற்று இருந்தனர். புலம்பெயர் மக்களின் போராட்டங்கள் கணக்கிலேயே எடுக்கப்படவில்லை. இந்த நிலையில்தான் எமது அண்ணன்கள் உடைகள் களையப் பட்டு கொல்லப்பட்டார்கள். எமது அக்காக்கள் மானபங் கப்படுத்தப்பட்டு காம வெறியர்களுக்கு இரையானார்கள். பலர் தங்களைத்தாங்களே அழித்துக் கொண்டார்கள்... அம்மா, அப்பா, அக்கா, அண்ணன், மாமன் என எங்கள் உறவுகள் எல்லாம் மண்ணோடு மண்ணாக்கப்பட்டனர். மறப்போமா...? அந்த நாட்களை...!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தொல்காப்பியன்: ஆதி அறிவன்

- கவிப்பேரரசு வைரமுத்து

மகத்தான தமிழ் ஆளுமைகளை இளைய சமூகத்திடம் கொண்டு சேர்க்கும் விதமாக கவிஞர் வைரமுத்து அரங்கேற்றிவரும் 'தமிழாற்றுப்படை' கட்டுரைத் தொடரில் மே 2 அன்று அவர் வாசித்த கட்டுரையின் சுருக்க வடிவம்.

மொழி ஓர் உயிரி. அது தன்னைப் பேசும் மனிதர்களை இயக்குகிறது. அவர்களால் இயக்கவும் பெறுகிறது. இறந்த காலத்தைச் சுமந்துகொண்டு நிகழ்காலத்தில் இயங்கிக்கொண்டு, எதிர்காலத்தின் பெருவெளியில் பயணிக்கிறது. ஓர் உயிரி சந்திக்கும் நல்வினைகளையும் அல்வினைகளையும் ஒரு மொழி எல்லாக் காலங்களிலும் எதிர்கொள்கிறது. காலத்திருப்பங்களில் சில மொழிகள் கவிழ்ந்துவிடுகின்றன. சில தடம் புரள்கின்றன. சில விபத்துக்குள்ளாகி விழுகின்றன. சில அந்நியக் கிருமிகள் புகுந்து நோயுற்று அழிகின்றன. வளர்சிதை மாற்றத்திற்கு உள்ளாகாத சில மொழிகள் முதுமையுற்று மாய்கின்றன.

இலத்தீன் - சம்ஸ்கிருதம் - ஹீப்ரு போன்ற மூத்த மொழிகளெல்லாம் மேற்சொன்ன இவற்றுள் ஏதோ ஒன்றிலோ, கண்டறியப்படாத ஒரு காரணத்தினாலோ உலக வழக்கு ஒழிந்துபோயின. ஆனால், மேற்சொன்ன அத்தனை காரணங்களையும் வெவ்வேறு காலகட்டங்களில் எதிர்கொண்டு இன்னும் உயிரோடு விளங்கும், உயிர்ப்போடு துலங்கும் மிகச் சில பேருயிரிகளில் நமது தமிழ் தலையாயது. வாழ்வோடு படைப்பிலக்கியங்களையும், படைப்பிலக்கியங்களோடு வாழ்வையும் தமிழர்கள் இடையறாது பேணிவந்ததே அது உயிர்த்திருப்பதற்கு முதல் காரணம் இலக்கணம் என்ற அறிவியல் மீது அது திட்டமிட்டுக் கட்டப்பட்டிருப்பது இரண்டாம் காரணம்.

ஆரிய வரவினால் தமிழுக்கு நேரவிருந்த பெரும் பின்னடைவிலிருந்து தமிழைக் கட்டிக்காத்த காப்பு நூல் என்றே தொல்காப்பியத்தைக் கருத வேண்டும். தொல் + காப்பு + இயம் - தொல்மரபுகளைக் காப்பதற்கே இயம்பப் பெற்ற இலக்கணம் என்று கொள்வது ஒருபோதும் உண்மைக்குப் புறம்பாகாது.

**தொல்காப்பியத்தின் தொன்மை**

தொல்காப்பியத்தின் தொன்மை குறித்து அறிவுலகத்தில் பல கருத்துகள் உண்டு. தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 5320 என்பார் வெள்ளைவாரணார், கி.மு. 2000 என்பார் புலவர் குழந்தை கி.மு. 1200 என்பார் கா.சுப்பிரமணிய பிள்ளை, கி.மு. 1000 என்பார் மு.வ., கி.மு. 700 என்பார் இலக்குவனார், கி.மு. 200 என்பர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் - மு.ராகவ அய்யங்கார் இருவரும் கி.பி. 400 என்பார் வழக்கம்போல் வையாபுரிப் பிள்ளை. தொல்காப்பியத்தின் காலம் குறித்து வேறுபாடுகள் இருப்பினும், அது தமிழுக்கு நல்ல காலம் என்பதில் அறிஞர்களுக்கிடையில் கருத்து

மூன்று தமிழ்ச் சங்கங்களை மூன்று கடற்கோள்கள் அழித்திருக்கின்றன என்பது ஆய்வுலக நம்பிக்கை. கி.மு. 2387இல் முதல் கடற்கோள், கி.மு. 504இல் இரண்டாம் கடற்கோள், கி.மு. 306இல் மூன்றாம் கடற்கோள் நேர்ந்தன என்பது அனுமானத் தால் பெற்ற ஆய்வாகும் அல்லது ஆய்வில் பெற்ற அனுமானமாகும். "இடைச்சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்று(த்) தொல்காப்பியம்" என்பது இறையனார் களவியல் ஆசிரியர் கூற்றாதலின் முதல் கடற்கோளுக்குப் பிறகு பிறந்தது தொல்காப்பியம் என்று கொள்ளலாம்.

முதற்கடற்கோளில் தமிழரின் பெரிய நிலப்பரப்பும் அரிய நூல்களும் ஆழிவாய்ப்பட்டழிய, தமிழினம் ஊனப்பட்டு நின்ற ஒரு காலவெளியில், ஆரிய மொழியும் பண்பாடும் தமிழர் மீது தாக்குறவு நிகழ்த்தத் தலைப்பட்டதாகக் கருதப்பட்ட பண்பாட்டுச் சூழலில், தமிழின் இலக்கணத்தையும் தமிழரின் வாழ்வியலையும் பெருமிதத்தோடு தூக்கி நிறுத்திய பேரறிவாளன் தொல்காப்பியன்.

**வடமொழி வழிநூலா தொல்காப்பியம்?**

தொல்காப்பியம் முதனூலா, வடமொழிச் சார்புற்ற வழிநூலா என்பது ஒரு நீண்ட வினா. தொல்காப்பியரின் ஒருசாலை மாணாக்கர் என்று கருதப்பெறும் பனம்பாரனார் பாடிக்கொடுத்த பாயிரத்தில் காணப்பெறும் ஒரு சொல்லாட்சியே இந்த வினாவை விதைத்திருப்பதாய் ஒரு சாரார் கருதுகிறார்கள். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் / தன்பெயர் தோற்றி" என்ற தொடரில் துலங்கும் ஐந்திரம் என்ற சொல், ஐந்திர வியாகரணமாகிய வடநூலைக் குறிக்கிறதென்றும் தொல்காப்பியம் அதனடியாய் வந்த வழிநூல் என்றும் சிலர் கருதுவர். ஐந்திரம் என்பதை ஐந்திர வியாகரணம் என்று எழுதிச்சென்ற அடியார்க்கு நல்லாரை அவர்கள் சான்று காட்டுவதுமுண்டு.

இங்கிருந்துதான் நம் பொறுப்புமிக்க மறுப்புவாதம் உயிர்ப்புறுகிறது. முதலில் ஐந்திரம் என்பது ஓர் இலக்கண நூல் அன்று. அது ஐந்திரம் - ஆக்கினேயம் - கணாதிபத்தியம் - சைவம் - வைணவம் - சாக்கியம் என்ற அறுவகைச் சமயங்களுள் ஒன்று. ஒரு சமய நூல் எப்படி இலக்கணத்திற்கு முதனூலாகும்? இன்னொன்று: தொல்காப்பியம் நிலவிய காலத்தில் ஐந்திரம் உலவியதாகச் சான்றொன்றும் கிட்டிலது. அதே பனம்பாரனாரின் பாயிரம் "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு / முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி" என்று பாடியிருப்பதால் தமிழக எல்லைகளுக்கு உட்பட்ட முந்து நூல்களே தொல்காப்பி யத்தின் மூல நூல்கள் என்பது தெளிவாகிறது. ஆகவே, தொல்காப்பி யம் முதனூல்தான் மூத்த தமிழ்க்குடியின் மூளைச்சாறுதான் தமிழினத்தின் ஐயந்திரிபற்ற ஆதி ஆறிவுதான்.


எழுத்து - சொல் - பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும் ஓர் அதிகாரத்திற்கு ஒன்பது வீதம் 27 இயல்களையும் இளம்பூரணர்

(13ஆம் பக்கம் பார்க்க)

புதுவிதி

# உண்மைகளை மறைக்க பலி எடுக்கப்படும் ஊடகவியலாளர்கள்

■ யோக நாராயணன்



மே மாதம் 3 ஆம் நாள் உலக ஊடகவியலாளர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்நாளில் ஊடகத்துறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி கொல்லப்பட்டவர்கள், சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், நீண்டகால சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் என ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், மக்களுக்கு எதிரான அநீதிகளை வெளிக்கொணர்ந்தமைக்காகவும், ஏராளமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமையை நினைவுகூருகிறோம். அதேவேளையில் எவ்வித பாதிப்புகளுக்கும் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்தாலும் அவர்கள் சென்ற நேர்மையான, துணிச்சலான பாதையில் நாங்களும் செல்ல இந் நாள் எங்களை ஊக்குவிக்கின்றது.

2006ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் நாள் அதாவது ஊடகவியலாளர் நாளுக்கு முதல் நாள் இரவு உதயன் பத்திரிகை நிறுவனத்திற்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய முகமூடி அணிந்த ஒரு கூட்டத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொலை வெறித் தாண்டவத்தில், இரண்டு ஊடகப் பணியாளர்கள் கொல்லப் பட்டனர். 14 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கும், இரும்புக் கம்பித் தாக்குதலுக்கும் உட்படுத்தப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளாக்கப் பட்டனர். நிறுவனத்தின் அச்சியந்திரங்கள் உட்பட பல உபகரணங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இலங்கையில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மேலாக நடத்தப்படும் வன்முறைகள் இதுதான் முதல் தடவையல்ல! உதயன் பத்திரிகை மீதும் அதன் பணியாளர் மீதும் 41 முறை இனந் தெரியாதவர்கள் என்று கூறப்படுபவர்களால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் யார் என்பதையும் அவர்களின் பின்னால் நின்று அவர்களை இயக்கிய சூத்திரதாரிகள் யார் என்பதையும் அவர்களுக்கு ஆதரவு வழங்கி, அவர்களை ஊக்குவிப்பவர்கள் யாரென்பதையும் எமது மக்கள் நன்கறிவர். பல முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இன்றுவரை எவரும் கைது செய்யப்படவுமில்லை, நீதியின் முன் நிறுத்தப்படவும் இல்லை.

இத்தகைய அநீதிகள் உதயன் நிறுவனத்திற்கு மேல் மட்டும் நடத்தப்பட்டது அல்ல. இலங்கையில் எம் ரீ.வி. நிறுவனம், நியூலங்கா நிறுவனம், போன்ற தேசிய செய்தி ஊடகங்களும் தாக்கப்பட்டன. எரியூட்டப்பட்டன. அது மட்டுமின்றி பல ஊடகவியலாளர்கள் வீதிகளில் வைத்தும், வீடுகளில் வைத்து மனைவி, பிள்ளைகள் முன்னிலையில் கொல்லப்பட்டனர். பலரின் குடியிருப்புக்கள் நொருக்கப்பட்டன. பல ஊடகவியலாளர்கள் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டை விட்டே வெளியேறினர். பலர் காலவரையறையின்றி சிறையில் அடைக்கப்பட்டனர்.

இலங்கையில் 2015 வரை 27 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் பிரேமதாச ஆட்சிக்காலத்தில் இருவரும், சந்திரிகா விஜயகுமாரதுங்க ஆட்சியில் 13 பேரும், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் 24 பேரும் உயிர் பறிக்கப்பட்டனர். இவர்களில் பிரபல்ய ஊடகவியலாளர்களான நிமலராஜன், சுகிர்தராஜன், நடேசன், சிவராம், லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். இப் பட்டியலுக்கு வெளியே கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களும் உயிர் அச்சம் காரணமாக நாட்டை விட்டு ஓடியோரும் என ஏராளமானோர் உண்டு.

அதேவேளையில் எமது நாட்டில் ஊடகப் பணி செய்து பாதிப்புக்குள்ளான சர்வதேச பத்திரிகையாளர்களும் உண்டு. பெற்றோலிய கூட்டுத்தாபனம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தைப் பார்வையிடச் சென்ற லண்டன் பி.பி.ஸி. நிருபர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார். இன்னுமொரு பி.பி.ஸி. நிருபர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். மேரி கொல்வின் என்ற பெண் ஊடகவியலாளர் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் ஒரு கண்ணை இழந்தார். பின்பு அவர் சிரியப் போரில் செய்தி சேகரித்துக் கொண்டிருக்கையில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சர்வதேச அளவிலும் இலங்கைக்குள்ளும் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து ஒடுக்குமுறையாளர்களால், வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனால் உயிரிழப்புகள் உட்பட பல்வேறு விதமான இன்னல்களுக்கு ஊடகவியலாளர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவேதான் இந்நாளில் ஊடகவியலாளர்கள் மேல் நடத்தப்பட்ட - நடத்தப்படும் அநீதிகளுக்கு எதிராகவும், அவற்றைக் கண்டித்தும் உலக ஊடகவியலாளர்கள் தினத்தை கொண்டாடுகிறார்கள். இந்நாளில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநீதிகள் அம்பலப்படுத்தப்படுவதுடன், எதிர்காலத்தில் எல்லாவிதமான அநீதிகளையும் அம்பலப்படுத்தி, மக்களுக்கு உண்மைகளை புலப்படுத்துவதில் தீர்க்கமான உற்சாகத்தையும் ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

செக் நாட்டைச் சேர்ந்த பிரபல ஊடகப் போராளியான ஜூலியஸ் பூசிக் ஜேர்மன் நாஸிஷவாதிகளால் தூக்கிலிடப்பட்டு, கொல்லப்பட்ட நாளே உலக ஊடகவியலாளர் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இவரின் ஊடகப் பணி ஜேர்மனியின் உலக நாடுகளை அடிமைப்படுத்தி, ஹிட்லரின் சர்வாதிகாரத்திற்கு எதிராக மக்களைத் தட்டியெழுப்புவதில் ஒரு போராளியின் வீச்சுடன் செயற்பட்டது. அவர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட பின்பும் அவர் எழுதிய தூக்கு மேடைக் குறிப்புகள் என்ற நூல் ஊடகவியலாளர்களுக்கு மட்டுமின்றி விடுதலை விரும்பும் அத்தனை மக்களுக்கும் வழிகாட்டி, உற்சாகப்படுத்தும் ஒரு வேதமாக கருதப்படுகின்றது.

"இன்பத்துக்காகப் பிறந்தோம்
இன்பத்துக்காக வளர்ந்தோம்
இன்பத்துக்காக வாழ்ந்தோம்
இன்பத்துக்காகப் போர்க்களம் புகுந்தோம்
இன்பத்துக்காக உயிர்விடத் துணிந்தோம்
துன்பம் எங்கள் பெயர்களை நெருங்க வேண்டாம்"

இது நாஸி சித்திரவதைக் கூடத்தில், கொடிய சித்திரவதைகள் காரணமாக எழும்பி நடக்க முடியாத நிலையில், துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்த போது அவரால் எழுதப்பட்ட வீர வரிகள் இவை!

ஜேர்மனியப் படையெடுப்பால் செக் நாடு ஆக்கிரமிக்கப்பட்ட போது ஒரு இடதுசாரிப் பத்திரிகை ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த இவர் தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இவரது மனைவியும், ஒரு பத்தரிகையாள்ரே! இவர்கள் இருவரும் தேடப்பட்டுவந்த போதிலும், தங்கள் ஊடகப் பணியை எவ்விதத்திலும் குறைவுபடவிடவில்லை. தொடர்ந்து மக்களை எழுச்சிப் படுத்தும் விதத்தில் துண்டுப் பிரசுரங்களை அடித்து மக்கள் மத்தியில் இரகசியமான முறையில் விநியோகித்து வந்தனர். அதேவேளை கெஸ்டாபோ என்ற ஹிட்லரின் இரகசிய பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காக அடிக்கடி இடம்மாற வேண்டியிருந்தது. பெரும் அச்சியந்திரங்களை காவிச் செல்ல முடியாததால், கடைசி நாட்களில் கையால் அச்சிடும் ஓர் இயந்திரத்தை வைத்துக்கொண்டே அவரும் அவரது மனைவியும் இரு நண்பர்களும் பணியாற்றி வந்தனர்.

ஆனால் காட்டிக்கொடுப்புக் காரணமாக எதிர்பாராதவிதமாக ஜூலியஸ் பூசிக் கைது செய்யப் படுகிறார். அவரது மனைவி தான் சமையல்காரி என்று சொல்லித் தப்பிவிடுகிறார். கைது செய்யப்பட்ட நண்பர்களில் ஒருவர் சித்திரவதை தாங்காது முழு இரகசியங்களையும் கக்கிவிடுகிறார். ஆனால் ஜூலியஸ் பூசிக்கை இரகசியங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கொடிய முறையில் சித்திரவதை செய்கின்றனர். ஆனால் அவர் எந்தவொரு விடயத்தையும் ஒப்புக் கொள்ளவில்லை. மூன்று முறை சித்திரவதை காரணமாக அவர் இறந்து விட்டாரெனக் கருதி அவரை சிறைக்கூண்டுக்குள் வீசியெறிந்துவிட்டுச் சென்றிருந்தனர். ஆனால், சக கைதிகள் நம்ப முடியாத அளவுக்கு அவர் மீண்டும் கண்விழித்து அவர்களோடு உரையாடினார்.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இறந்துவிட்டார் எனக் கருதி அவரின் ஆத்ம சாந்திக்காக ஜெபம் சொல்ல ஆரம்பித்து விட்டனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)




# முள்ளிவாய்க்கால் நினைவு! பங்கு போடும் பண்டமல்ல


கிங்ஸிலி இராசநாயகம்

**மே 18** நிகழ்வு தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவரவை விடுத்த அறிக்கை பரவலாக மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கு மிக மிக நெருக்கடியான காலகட்டங்களில் இந்த அமைப்பு ஆற்றியுள்ள பணிகளை உணர்வுள்ள எந்தத் தமிழனும் - குறிப்பாக விடுதலைப் போரில் ஆத்மார்த்தமாகப் பங்குபற்றிய எவரும் மறந்துவிடமாட்டார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள நெருக்கடிகள் அரசியல்வாதிகளுக்கும் இருந்தன. கணிசமானோர் மௌனமாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகினர். ஆனால் நாற்புறம் துப்பாக்கிகள் சூழ்ந்த நிலையிலும் தமிழரின் உணர்வெழுச்சி நாட்களைத் தவறாது - அஞ்சாமல் அனுஷ்டித்த வரலாறு இந்த அமைப்புக்கு மட்டுமே உண்டு. இந்திய இராணுவ காலம் முதல் நெருக்கடியான காலத்தில் எப்படியெல்லாம் பல்கலைக்கழகச் சமூகத்தின் பங்களிப்பு இருந்தது என்பதை வெளிப்படுத்தினால் அது காட்டிக்கொடுப்பாகிவிடும். ஏனெனில் எந்தக் காலத்திலும் எதுவும் மாறலாம்.

கடந்த மே 18 நிகழ்வுகள் ஒவ்வொரு தமிழனும் வெட்கப்பட வேண்டியவை. ஒரு வீட்டுக்குள் சாமியறை, சமையல்கூடம், விறாந்தை, படுக்கையறை, மலசலகூடம், குளியலறை என எல்லாமே அடங்கியுள்ளன. அந்தந்த இடத்துக்குரிய நோக்கத்தை உரியமுறையிலேயே பயன்படுத்த வேண்டும். எல்லாம் வீட்டுக்குள்ளேதானே இருக்கின்றன எனக் காரணம் சொல்லிக்கொண்டு சாமியறைக் குள் வேறு கடமைகளை ஆற்ற முடியாது. பிரித்தானிய தமிழர் பேரவையும் ஐக்கியப்பட்ட மே 18 நாள் நினைவேந்தல் பற்றி வலியுறுத்தியுள்ளது . பிரபல பத்தி எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான நிலாந்தனும் கடந்த மாவீரர் நாள் காலப்பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளைப் பொதுவாக நடத்துவதற்கான அமைப்பொன்றின் அவசியம் பற்றி வலியுறுத்தி இருந்தார்.

மே 18 மற்றும் மாவீரர் நாள், அன்னை பூபதி நினைவேந்தல், தியாக தீபம் திலீபன் நினைவு போன்றவற்றை அந்தந்த நோக்கத்தை மட்டுமே முதன்மைப்படுத்தியதாக நடத்த வேண்டும். கடந்த மே 18 நிகழ்வை அசிங்கப்படுத்தியதும், செஞ்சோலை வளாகத்தில் நடைபெற்ற மாணவியர் படுகொலை (வான் வழி ) நினைவில் இன்னொரு அரசியல் கட்சியைச் சாடக் கிடைத்த சந்தர்ப்பமாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கருதியதும் மனித நாகரிகமற்ற அசிங்கமான செயற்பாடுகளாகும். இந்தத் தவறு பெருமளவுக்கு கடந்த மாவீரர் நாளில் தவிர்க்கப்பட்டிருந்தது. எனினும் மட்டக்களப்பு மாவடி


யோகன் பாதர்

முன்மாரியில் அரசியலுக்குப் புதியவரான ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஏனையோரின் அறிவுறுத்தலையும் மீறி உரையாற்றியமை அங்கிருந்தோரால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. மாவீரர் தியாகத்தைப் பற்றி அவரை விட அங்கு கூடியிருந்த எல்லோருக்குமே உணர்வு பூர்வமாக விளங்கும். என்னை எவரும் கட்டுப்படுத்த முடியாது என்ற அவரது நினைப்பு இந்தப் போராட்டத்தை விளங்கிக்கொள்ளாததன் விளைவாகும். அடுத்த நாள் ஊடகங்களுக்கு தீனி கொடுக்கவே அது பயன்பட்டது. இது ஒரு விளம்பரம்தான் .

'என் வழி தனிவழி" என்பது சினிமாவில் ரஜனி சொல்வதற்குத்தான் சரி . அதில் மட்டுமே ரசிக்க முடியும். இரத்தமும், சதையும், அவலமும் நிறைந்த எமது போராட்ட நிகழ்வுகளில் அனுமதிக்க முடியாதது. அதுபோல் நாம் மிகப்பெரிய அமைப்பு என்ற நினைப்பில் எவராவது தவறுகளை நியாயப்படுத்தும் களமாக இதனைப் பயன்படுத்த முனையக்கூடாது என்பதைத் தமிழ்ச் சமூகம் இரு தரப்பினருக்கும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைக்க விரும்புகிறது. எங்களது உறவுகளை உணர்வுடன் நினைவு கூருவோம். அவர்களுக்கு நாம் என்ன சொல்ல விரும்புகிறோம் என்பதை எமது மனதில் நினைத்துக்கொள்வோம். ஆளுக்காள் அது வேறுபடும். ஆனால் கண்ணீரின் பெறுமதி மட்டும் ஒரேயளவாக இருக்கும். புத்திரசோகங்கள், உறவுகளின் இழப்புக்களின் வலிகள் சம்பந்தப்பட்டோரால் மட்டுமே உணர முடியும். அங்கு எவரது வார்த்தைகளும் மனதில் பதிய மாட்டா. எனவே அங்கே உரைகள் தேவையில்லை. போக்குவரத்து நடைமுறைகள், நிகழ்வை ஒரு வழிநடத்தலில் மேற்கொள்வதற்கான அறிவிப்புக்கள் போன்றவை மட்டுமே இருந்தால் போதுமானது. ஆம்! எம்மை நிம்மதியாக அழவிடுங்கள் என அரசியல் வாதிகளையும், ஊடகவியலாளர்களையும் மீண்டும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

ஜஸ்டின் (வீச்சுக்கல்முனை), யோகன் (சின்ன ஊறணி ) கப்டன் ஆனந்த் தங்கையா சுரேஸ்குமார் (இருதய புரம் ), லெப் சிறி ரகர்தேவன் ( தம்பிப்பிள்ளை செந்தில்நாதன் புதூர்) ஆகிய மாவீரர்களின் கடின உழைப்பும் இதில் சம்பந்தப்பட்டுள்ளது. மேலும் அன்று போராளிகளாக இருந்து இன்று புலம்பெயர் தேசங்களில் அன்னை பூபதியின் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் போராளிகள் சிலர் இவ்வருட நினைவை சிறப்பாகச் செய்யவேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தனர். இவர்களில் வண. பிதா


பூரணலட்சுமி சின்னத்துரை

சந்திரா பெர்னாண்டோ, வணசிங்கா , கணபதிப்பிள்ளை, கனகரெத்தினம், திருமதி பூரணலட்சுமி ஆகியோர் ஆயுதக் குழுக்களால் கொல்லப்பட்டனர்.

சட்டத்தரணி பொன். வேணுதாஸ் இந்தியப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாலும் பின்னர் இந்தியப் படையினரின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டதாலும் இவர் போராளியாக வேண்டிய சூழல் ஏற்பட்டது. பிரான்சிஸைச் சுட்டுக் கொன்றவர் தனது சாதனை பற்றி சுவிஸில் மார் தட்டுகிறார். இந்த வரலாற்றையெல்லாம் தெரிந்தோ, தெரியாமலோ இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு அமைப்பாளர் சுரேசுக்கு யோகன் பாதரின் முக்கியத்துவம் தெரியும் காலை நடைபெறவிருந்த உண்ணாவிரதம் பற்றி எல்லாம் தெரிந்திருந்தும் அதற்கு முன்னதாகப் போய் "என் வழி தனி வழி" என ஐ.தே.க. பிரமுகர் மகேஸ்வரனுடன் போய் இரு நிமிடம் நேரம் அஞ்சலி செலுத்திவிட்டு உலகத்துக்குச் செய்தியனுப்பியுள்ளார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சுரேஷ் .

அன்னை வாழ்ந்த இடம் கருவேப்பங்கேணி உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த இடம் அமிர்தகழி. இந்த இரண்டு வட்டாரங்களும் அடங்கும். மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் ஒழுங்காக நியமனப்பத்திரம் கூட தாக்கல் செய்யத் தெரியாதவர் சுரேஷ். இவர்கள் போன்றோரை தமிழ் மக்கள் நிராகரிப்பதில் தவறென்ன என்ற உண்மையை இக் கட்சியினர் உணர்ந்துகொள்ள வேண்டும். பல்கலைக்கழக மாணவர் குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, கூட்டமைப்புக்கு வெள்ளையடிக்கும் முயற்சி இது எனக் கொச்சைப்படுத்தியுள்ளது

அன்னை பூபதி ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில்தான் உண்ணா விரதமிருந்தார். அப்படியாயின் சுரேசும் ஐ.தே.கவுக்கு வெள்ளை யடிக்கிறாரா? என்று நாம் கேட்க மாட்டோம். ஏனெனில் தமிழரா கப் பிறந்த அனைவராலும் போற்றப்படு பவர் அன்னை பூபதி. ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலைக் குழப்பும் வித மாக அன்னையின் சகோதரியை அழைத்து வந்து அஞ்சலி செலுத்த வைத்து தமிழன் என்றுமே ஒற்றுமையாக இருக்கமாட்டான்


(18ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 35

# ஆனைக்கோட்டை


அன்று மாடுகள் செக்கிழுத்தன

வட இலங்கையின் வரலாற்றுப் பழமை மிகுந்த இடங்களுள் ஆனைக்கோட்டையும் ஒன்று. இது வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஓர் ஊராகும். யாழ்ப்பாண நகரத்திலிருந்து மானிப்பாய் செல்லும் வீதியில் நகரத்திலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

இதன் அயலில் மானிப்பாய், நவாலி, தாவடி, வண்ணார்பண்ணை ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன.

ஆனை (யானை) + கோட்டை = ஆனைக்கோட்டை என அமைகின்றது. வணிக நோக்கில் யானைகள் கொண்டுவரப்பட்ட அல்லது யானைப் படைகள் தங்கியிருந்த இடம் என்ற பொருளிலேயே இந்தப் பெயர் வழக்கத்துக்கு வந்துள்ளது.

ஆனைக்கோட்டை என்பதற்கு யானைகளின் கூட்டம், தொகுதி, நெருக்கம் எனப் பொருள் கொள்ளலாம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இலங்கையிலிருந்து பெருந் தொகையான யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளமை பற்றி கி.மு. 4ஆம் நூற்றாண்டில் வட இந்தியத் தலைநகரமான பாடலி புரத்திலிருந்து கிரேக்கத் தூத னாகத் தங்கியிருந்த மொஸ்தனிஸ் என்பவர் 'இந்திகா' என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

யானை ஏற்றுமதியில் வட இலங்கைத் துறைமுகங்கள் முதன்மை பெற்றிருந்தன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் முதலானோர் இலங்கையில் ஆட்சி புரிந்த காலங்களில் யானை ஏற்றுமதி பெரிதும் இடம்பெற்றது. குறிப்பாக ஒல்லாந்தர் தம் ஆட்சிக் காலத்தில் வன்னிப் பகுதியிலிருந்து ஆண்டுதோறும் 30 யானைகளை திறையாகப் பெற்று அவற்றை ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். இந்த யானைகள் ஆனைக்கோட் டைக்குக் கொண்டுவரப்பட்டி - ருக்கலாம். ஆனைக்கோட்டையின் எல்லையில் காக்கைதீவு என்ற துறை உள்ளமையைக் கருத்திற்கொண்டு நோக்கும்போது யானை ஏற்றுமதி செய்ய இந்தத் துறைமுகம் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகிறது. ஆனைக்கோட்டை யாழ்ப்பாணத் தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது குடியிருப்பு மையம் எனக் கூறப்படுகின்றது.

இதற்கு ஆதாரமாக அங்கு கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை, உரோம மட்கலன்கள், லட்சுமி நாணயங்கள் ஆகியவையைக் கொள்ளலாம். இவை 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக கருதப்படுகின்றன.

'ஆனைக்கோட்டை முத்திரை' என்பது யாழ்ப்பாண ஆனைக் கோட்டை என்ற மேற்படி ஊரில் 1980 ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற அகழ்வாய்வு ஒன்றின்போது கண்டுபிடிக்கப் பட்ட ஒரு முத்திரையாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு அடக்கக்குழி ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்ட இந்த முத்திரை ஒரு மோதிரத்தின் முன் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த முத்திரை எதனால் செய்யப்பட்ட என்பது தொடர்பில் ஆய்வாளர்களிடையே பெரும் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

ஆனைக்கோட்டையில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் மூலம் பின்வரும் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- கறுப்புச் சிவப்புநிற மட்பாண் டங்கள்
- உரோம ரவு லெற்றெற் மட் கலன்கள்
- மிருக எலும்புகள், மீன் எலும்புகள், செப்பனிடப்பட்ட, செப்பனிடப்படாத ஊசிகள், மணிகள், சீப்புகள், கொம்புகள்
- கல், எலும்புகளால் உருவாக் கப்பட்ட கருவிகள்
- செம்பு, இரும்பு ஆகியவற்றி னாலான சங்குகள், மணிகள்
- கிண்ணங்கள், வாட்டில்கள் முதலிய பாவனைப் பொருட்கள்

இலட்சுமி நாணயங்கள், உரோம நாணயங்கள், சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண் ஓடுகள், மனித எலும்புக் கூடுகள்

சித்திர எழுத்து, பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட வெண்கல முத்திரை முதலியன கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த முத்திரையில் கோலேந்த, கோலேத, கோலேதம் என பொ. இந்திரபாலா என அடையாளப் படுத்தியுள்ளார்.


ஆனைக்கோட்டை முத்திரை

விவசாயச் செழிப்புமிக்க இந்த ஊரில் இன்றும் பழையவற்றை பறைசாற்றும் விதத்தில் மடம் உண்டு. ஆறுகால்மடம் என்ற குறிச்சியும் இங்கு உள்ளது. அத்துடன் நல்லெண்ணெய்க்கும் புகழ்பெற்ற இடமாக விளங்குகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் நல்லெண்ணெய்க்கு உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் பெரும் கிராக்கி உண்டு.

இவ்வாறாக தமிழரின் பழை யான இருப்பை அடையாளப் படுத்தும் பண்பாட்டிடமாகவும் வணிக மையமாகவும் ஆனைக் கோட்டை திகழ்ந்து மண்வாசம் வீசி வருகின்றது.


ஆறுகால்மடம்



# வாரப்பலன்

### மேடம்
நற்பலன் கிடைக்கும். உற்சாகமுடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். உறவினர், நண்பர்களின் மூலம் உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் பாசம் மகிழ்ச்சியைத் தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைத்திருக்கும்.

### துலாம்
அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். இஷ்ட தெய்வ அருளால் செயல் எளிதாக நிறைவேறும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைத்திருக்கும்.

### ரிஷபம்
திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். புத்திரர் வளர்ச்சிக்கு வழிகாண்பீர்கள். பூர்வீகச் சொத்திலிருந்து பணம்வரும். எதிரிகள் உங்களின் நல்ல எண்ணங்களை புரிந்து கொள்வர். உடல்நிலை சீராக இருக்கும்.

### விருச்சிகம்
முக்கியமான செயல் எளிதில் நிறைவேறும். அளவுடன் பேசி நற்பெயர் பெறுவீர்கள். உடன்பிறந்தவர் அன்பு பாசம் கொள்வர். எதிர்ப்பாளர் சிரமங்களால் விலகுவர். வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள்.

### மிதுனம்
பழகுபவர்களின் மனம் உணர்ந்து பேசுவீர்கள். புதிய முயற்சிகள் முழு அளவில் வெற்றி பெறும், தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தின் தேவை பெருமளவில் பூர்த்தியாகும். புத்திரர் தன்னம்பிக்கையுடன் செயற்படுவர்.

### தனுசு
நற்பலன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை முன்யோசனையுடன் செயற்படுத்துவது நல்லது. புதிய வீடு வாங்க அனுகூலம் உண்டாகும். வழக்கு, விவகாரத்தில் தீர்வு கிடைக்கத் தாமதமாகலாம்.

### கடகம்
இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். திட்டமிட்ட முக்கிய பணிகள் நிறைவேறும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சியை தரும். சுற்றுலா பயணத்தில் ஆர்வம் கூடும். வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு கூடும்.


### மகரம்
மன அமைதியை பாதுகாக்க கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. பணியாளர்களின் பொறுப்பான பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

### சிம்மம்
எண்ணத்தில் நேர்மை மிகுந்திருக்கும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். தொழிலில் வளர்ச்சி பெற கூடுதல் கவனம் வேண்டும். பணியாளர்கள் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர்.


### கும்பம்
நிகழ்வுகள் சாதகமாக அமைந்திடும். மனக்குழப்பம் நீங்கி பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். அன்றாட வாழ்வியல் நடைமுறை சிறப்பாக இருக்கும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

### கன்னி
உழைப்பின் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். அனுகூல நிகழ்வுகளால் மனதில் தன்னம்பிக்கை உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். புத்திரர் உங்களின் வழிகாட்டுதலை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வர்.


### மீனம்
புத்தி சாதுரியத்துடன் செயற்பட்டு வருவீர்கள். உங்கள் நற்செயலை உறவினர், நண்பர்கள் வாழ்த்துவர். குடும்பத்திற்கான தேவையனைத்தும் நிறைவேறும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.




பொருத்தமற்ற பாடத்துறை சார்ந்தவர்களுக்கு நியமனம் வழங்குவதாகவும் பட்டம் பெற்று அந்தத்துறையில் தேர்ந்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை எனக் கூறி வட மாகாண ஆளுநர் காரியாலயத்திற்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது



மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு சிரமதானப்பணிகள் யாழ். பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.



கிளிநொச்சி - இரணைதீவு மக்கள் தமது போராட்டத்தைக் கண்டு கொள்ளாத கிளிநொச்சி அரச நிர்வாகத்திற்கு எதிராக மனித உரிமை ஆணைக் குழுவிடம் புகார் செய்யப் போவதாகக் கூறி உள்ளனர். அவர்களின் மீள் குடியேற்றம் தொடர்பான போராட்டம் ஒரு வருடத்தை எட்டியுள்ளது.



முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேற்றாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வகுப்பறைத் தொகுதி மற்றும் ஆசிரியர் விடுதி திறப்பு விழா நிகழ்வு



வட மாகாணத் தொண்டராசிரியர்கள் இன்றைய தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் சந்தித்தபோது...



சர்வதேச உழைப்பாளிகள் தினத்தை முன்னிட்டு வவுனியா இறம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் வயோதிபர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டுள்ளது.

# விடுகதைகள்

1. மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல. பட்டை தீட்டியிருப்பான் சாமியார் அல்ல அவன் யார்?

2. கறுத்த ரோஜா மொட்டு, கனத்த மேகம் கண்டு கணத்தில் இதழ் விரித்திடும், காத்திடும் பின் சாய்ந்திடும் அது என்ன?

3. நெஞ்சிலே ஒரு கல், வீட்டிலே ஒரு கல், வானத்திலே ஒரு கல் அவை எவை?

4. பார்த்தவர் இருவர், எடுத்தவர் ஐவர், உண்டவரோ ஒருவர் அவர்கள் யார்?


**விடைகள்:**
1. அணில் 2. குடை 3. விக்கல், உப்புக்கல், கறுக்கல். 4. கண்கள், விரல்கள், நாக்கு.

## காண்டா மிருகம்



உலகிலேயே சிறிய இன வகைகள் காண்டா மிருகத்தை SUMATRAN RHINOCEROS என்று அழைப்பர்.

இவை. மலேசியா மியன் மார், இந்தோனேஷியா, தாய் லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. இந்த இனக் காண்டா மிருகங்கள் தற்போது அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# முல்லா கதைகள்

## ஒரு நல்ல செய்தி

அந்த ஊரில் ஒரு வழக்கம் உண்டு. யாராவது ஒருவர் நல்ல செய்தியொன்றைச் சொன்னால், அதற்காக அவர்களுக்கு பணம் வசூலித்து அன்பளிப்பாகக் கொடுப்பார்கள். அந்த வழக்கம் ஒருவிதமான மூடநம்பிக்கை என்பது முல்லாவின் கருத்து. அந்த மக்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும் என்று முல்லா கருதினார்.

ஒருநாள் அவர் சந்தை கூடும் இடத்தில், மக்கள் நடமாட்டம் அதிகம் இருந்த ஓர் இடத்தில் நின்று கொண்டு அன்பார்ந்த பொதுமக்களே! உங்களுக்குச் சொல்வதற்காக அருமையான நல்ல செய்தி ஒன்றை வைத்திருக்கிறேன். எனக்குப் பரிசு தருவதற்காக உடனே பணம் வசூலியுங்கள் என்று கூச்சல் போட்டார்.

முல்லா ஒரு செய்தியைச் சொல்லுகிறார் என்றால் உண்மையிலேயே அது நல்ல செய்தியாகத்தான் இருக்கும் என்ற நம்பிய மக்கள், அவசர அவசரமாக பணம் வசூலித்து ஒரு கணிசமான தொகையை முல்லாவிடம் கொடுத்தனர்.

அந்த அன்பளிப்புத் தொகையை வாங்கி எண்ணி சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்ட முல்லா, மக்களை நோக்கி அன்பார்ந்த பொதுமக்களே! நான் கூற இருக்கும் நல்ல செய்தி இதுதான். இந்த முல்லா ஒரு மகனுக்குத் தந்தையாகியிருக்கிறார் என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

# அட அப்படியா?

- பிறந்த குழந்தையின் உடலில் 75 சதவீதம் நீர் உள்ளது. இது வாழைப்பழம், உருளைக் கிழங்கிலுள்ள நீரை விட அதிகம்
- சீனாவில் க்வான்ஸி பகுதியைச் சேர்ந்த Red Yao பழங்குடியைச் சேர்ந்த பெண்கள், தங்கள் வாழ்நாளில் திருமணத்தின்போது மட்டுமே தலைமுடியை வெட்டுகிறார்கள்.
- கென்யாவில் யானையின் கழிவிலிருந்து காகிதத் தாள்களைத் தயாரிக்கிறார்கள். 50 கிலோ கழிவிலிருந்து 150 காகிதத் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன.

# ஏன் மாவிலை தோரணம் கட்டுகிறோம்?




மாவிலை ஒரு கிருமிநாசினி. அதற்கு துர் தேவதைகளை வீட்டுக்குள் நுழைய விடாமல் தடுக்கும் சக்தியும் உண்டு. மேலும் மாவிலை அழுகுவது கிடையாது. முறையாகக் காய்ந்து உலரும். இதுபோல் வாழ்க்கையும் கெட்டுப் போகாமல், நீண்ட காலம் நடைபெற்று முற்றுப் பெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் மங்கலம் பெருக மாவிலை தோரணம் கட்டு கிறோம்.

# பெண் நுளம்புகளே அதிகம் கடிக்கின்றன

நுளம்பு நம்மை கடிக்கும் முன் நமது உடலின் தட்ப வெப்ப நிலை, இரத்த ஓட்டம் ஆகியவற்றை அறிந்துகொண்டு சரியான இடத்தில அமர்ந்து இரத்தம் குடிக்கின்றது. சில அங்குலங்களுக்கு மேல் நுளம்புகளினால் பார்க்க முடியாது. ஒரு சொட்டு இரத்தத்தை கொண்டு 40 முதல் 50 நுளம்புகள் தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்ளும் , இதை உறிஞ்ச ஒரு நிமிடம் கூட ஆகாது. இனப்பெருக்கத்திற்கு தயாராகும் பெண் நுளம்புகளே அதிகம் மனிதனை கடிக்கின்றன.



# ஆப்பிழுத்த குரங்கு



முன்னொரு காலத்தில் சித்திரன் என்ற தச்சன் இருந்தான். அவன் மரவேலை நன்றாகச் செய்வான். மரங்களை நூல் போட்டு அறுப்பதிலும் மிகுந்த கெட்டிக்காரன்.

ஒரு பணக்காரருக்கு வீடு கட்டுவதற்காக மரங்கள் நிறைய அறுக்க வேண்டியிருந்தது. அந்த மரவேலைகளை மதியம் வரை செய்தான்.


சாப்பிடச் செல்வதற்காக பிளந்த மரத் துண்டு ஒன்று கூடாதிருக்க, முளையடித்து வைத்துவிட்டுச் சென்றான். அப்பொழுது, குரங்குகள் சில கூட்டமாக அங்கு வந்தன.

மரக் கட்டைகள் மீது ஏறி குரங்குகள் ஓடியாடி விளையாடின. வேண்டாத ஓர் இடத்தில் யாரோ இந்த ஆப்பை அடித்திருக்கின்றனர் என்று கூறி அசைத்து அசைத்து அந்த ஆப்பை ஒரு குரங்கு பிடுங்கியது.

ஆப்பு விடுபட்டதும், பிளவு பட்ட மரம் ஒன்றுசேரவே, அதன் வாலும் பின்பகுதியும் நன்கு நசுக்கப்பட்டது. உடனே அது 'கீச் கீச்' என்று ஓலமிட்டு அப்படியே இறந்து போயிற்று.

சிறுவர்களே உங்களுக்குத் தெரியாத காரியங்களில் நீங்கள் ஈடுபடவேகூடாது. அப்படி ஈடுபட்டதால் இறந்துபோன குரங்கை நினைத்துப் பாருங்கள்.

எனவே, நீங்கள் இது போன்ற காரியத்தில் ஈடுபடக்கூடாது.



# சூரியன்

எரிக்கும் வட்ட சூரியன்
தகதகவென்று மின்னுதே!!
பலகோடி தூரம் அது இருந்தும்
மின்னும் ஒளி இங்கு வர
எட்டு நொடிகள் ஆகுதாம்.
எத்தனை வேகம் பார்த்தாயா?
தினம் தினம் தோன்றுமே
காலை நேரம் தவறாமல்
கடமைகளை ஆற்றுமே!
உலகம் அதன் கையில்

அதனை நன்றாய் அறிந்த சூரியன்
கடமை தவறுவது இல்லையே!
நாமும் என்றும் அதுபோல
நடக்க உறுதி கொள்வோமே!
அறிவோமே!

# மீன் தூண்டிலும் ஆன்மீகமும்



ஒரு குளக்கரையில் இராமகிருஷ்ண பரமஹம்சர் சென்று கொண்டிருந்தார்.

அவரைக் கண்ட ஒரு பக்தர், 'குருதேவா! பக்தி மார்க்கத்தில் வெற்றி பெற விரும்புகிறேன். வழிகாட்டுங்கள்" - என்றார்.

"இதோ... இங்கு மீன் பிடிக்க தூண்டில் போடுபவனைப் பார். தினமும் இங்கு வந்து என்ன நடக்கிறது என்று கவனி" என்று சொல்லி விட்டுப் போனார்.

நான்கு நாளாக தொடர்ந்து வந்த பக்தர், தூண்டில் போடுவதை உன்னிப்பாக கவனித்தார்.

பின் இராமகிருஷ்ணரைக் காணச் சென்றார். "குருதேவா... தூண்டில் போடுவதை பார்த்து விட்டேன்.

இப்போதாவது வழி சொல்லுங்கள்" என்றார்.

"அதுதான் வழி கிடைத்திருக்குமே.... இனி நான் சொல்ல என்ன இருக்கிறது?" என்றார் இராம கிருஷ்ணர் புரியாமல் விழித்தார் பக்தர்.

அவரிடம் இராமகிருஷ்ணர், "யார் பேச்சு கொடுத்தாலும், மீன் பிடிப்பவனின் கவனம் தூண்டில் மீதே இருக்கும். வெயிலில் காய்ந்தாலும் அவன் சிறிதும் கவலைப்பட மாட்டான். மீன் சிக்கியதும் சந்தோசப்பட்டிருப்பான் இல்லையா...." என்றார்.

"ஆமாம்....குருதேவா... அது தான் நடந்தது" என்றார் பக்தர்.

"குடும்ப வாழ்வில் ஈடுபட்டாலும், கடவுள் சிந்தனையில் மனம் ஈடுபடட்டும். பக்தியை வெல்ல இதுவே வழி" என்றார் இராமகிருஷ்ணர்.

# திருமணமும் பெண் சம்மதமும்

திருமணத்திற்கு பெண்ணின் சம்மதம் எவ்வளவு அவசியம் என்பதை நபிகள் நாயகத்தின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் வழியாக அறியலாம்.

நாயகத்திடம், தனக்கு திருமணம் நடக்க இருப்பதாக சொன்னார் ஒருவர். "மணப்பெண்ணை பார்த்து விட்டாயா?" என்று கேட்டார் நாயகம்.


அவர் "இல்லை" என்றார்.

"முதலில் பெண்ணைப் பார். பின் அவளுடைய சம்மதத்தை தெரிந்துகொள். அப்போது தான் உங்களிடையே அன்பு ஏற்படும்" என்றார் நாயகம்.

மற்றொரு சமயத்தில் ஒரு பெண் நாயகத்திடம், "கட்டாயப்படுத்தி ஒரு பெண்ணை ஒருவருக்கு திரு மணம் செய்விக்க மார்க்கத்தில் அனுமதியுண்டா?" என்று கேட்டாள்.

"உனக்கு பிரியமில்லாதவரை நீ திருமணம் செய்யாதே" எனப் பதிலளித்தார்.

"கன்னியாகவோ, விதவையா கவோ எப்படி இருந்தாலும் ஒரு பெண்ணுடைய அனுமதி இல்லாமல் அவருக்கு திருமணம் செய்து வைக்க கூடாது" என்கிறார் நாயகம்.



# இயேசுவும் மாற்குவும்

இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு பேரின் நிரூபணங்களே புதிய ஏற்பாடாக கிறிஸ்துவின் வாழ்க்கையைக் கூறுகின்றன. இதிலிருந்தே மாற்கு ஒரு மிகச் சிறந்த நற்செய்தி அறிவிப்புப் பணியாளர் என்பதை அறியலாம்.

முதலில் அவர் பௌலுடன் சேர்ந்து நற்செய்தி அறிவித்தார். அதன் பிறகு தூய பேதுருவுடன் நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்தார். இறுதியாக இவர் அலெக் ஸாண்ட்ரியா நகரத்தின் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். அதன் பிறகு தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் இறைபணிக்காக ஒப்புக்கொடுத்தார்.

ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவித்தார். அதற்காகத் தன்னுடைய இன்னுயிரையும் கொடுத்தார். மாற்கு, அலெக்ஸாண்ட்ரியா நகருக்கு நற்செய்தி அறிவிக்க அனுப்பப்பட்டிருந்த நேரம். அந்த நகரத்துக்குள் அவர் நுழைந்தபோது அவரது காலணிகளில் ஒன்று அறுந்து போய்விட்டது. எனவே, அவர் அருகே இருந்த செருப்பு தைக்கும் தொழிலாளியிடம் சென்று தன்னுடைய காலணியைத் தைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

செருப்பு தைக்கும் தொழிலாளி, மாற்கின் காலணியைத் தைக்கும்போது தவறுதலாக அவர் பயன்படுத்திய ஊசி அவரின் இடது கையில் குத்திவிட்டது. இரத்தம் கொப்பளித்துக் கொண்டு வெளியே வந்தது. அப்போது அவர் 'கடவுள் ஒருவரே' என்று சத்தமாகக் கத்தினார். உடனே மாற்கு, அருகே கிடந்த மணலைக் குழப்பி சேறு உண்டாக்கி, அதனை எடுத்து அந்தச் செருப்பு தைக்கும் தொழிலாளியின் காயம்பட்ட கையில் வைத்தார். அவருடைய கையிலிருந்து வழிந்த இரத்தம் முற்றிலுமாக நின்றுபோனது. வலியும் காணாமற்போனது.

இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட அந்த மனிதர் மாற்கிடம், "நீர் யார்?" என்று கேட்டார். அதற்கு மாற்கு, "நான் ஆண்டவர் இயேசுவின் ஊழியர். அவருடைய நற்செய்தியை அறிவிப்பதற்காகவே இங்கே வந்தேன்" என்று எடுத்துரைத்தா். மாற்கின் வார்த்தைகளால் மனம் மாறிய அந்தத் தொழிலாளி, இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார். அந்தத் தொழிலாளியின் பெயர் அனியானுஸ். அவர் மட்டுமல்ல, அவருடைய குடும்பம் முழுவதும் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கியது. இதனால் அவர்கள் அனைவரும் திருமுழுக்குப் பெற்றார்கள்.



இதற்கிடையே இந்தச் செய்தி எப்படியோ நகர மக்களின் காதுகளை எட்ட, அவர்கள் மாற்கைக் கொல்லத் தீர்மானித்தார்கள். இதனால் மாற்கு அனியானுஸை அலெக்ஸாண்ட்ரியா நகரின் ஆயராக நியமித்துவிட்டு, வேறொரு நகருக்கு நற்செய்தி அறிவிக்கச் சென்றார்.

ஆண்டவர் இயேசு கூறினார் என "உலகெங்கும் சென்று, எல்லோருக்கும் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள்" மாற்கு இப்படிக் கூறுகிறார். ஆகவே, ஆண்டவர் இயேசு சொன்ன கட்டளையை, மாற்கு நற்செய்தியாளர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியை நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ முயல்வோம்.

# சிறுவயது பருமன் சுகமில்லாத சுமை



நம் தெருக்களில் பெரும்பாலும் நடைப்பயிற்சி செய்பவர்கள் வய தானவர்கள்தான். இளைஞர்கள், 'உடற்பயிற்சியை எல்லாம் வயதான பிறகு பார்த்துக்கொள்ள லாம்' என்று நினைக்கிறார்கள். ஆனால், 'பல் போன பிறகு தொடங்குவதைவிட, பல் முளைக்கும்போதே உடற் பயிற்சியைத் தொடங்க வேண்டும்' என சமீபத்திய ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

'குழந்தைகள் குண்டாக இருப்பதுதான் நல்லது' என்று பலரும் கருதுகிறார்கள். தவிர 'குழந்தைகள், சிறுவர்கள் எதை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்' என்ற எண்ணம் நம் மக்கள் மனதில் இருக்கிறது. 'வளரும் பருவத்தினருக்கு உணவுக் கட்டுப்பாடுகளும் உடற்பயிற்சியும் தேவையில்லை, வயதானவர்களுக்கே அது அவசியம்' என்ற தவறான கருத்தை விதைத்து விட்டார்கள். இதன் காரணமாக, இன்றைய சிறுவர்களில் பலர் உடல் பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தைகள் உடல்பருமன் இன்று உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள் ளது. உலகில், ஐந்து வயதுக்குட் பட்ட 4.3 கோடி குழந்தைகள் உடல் பருமனோடு வாழ்கி றார்கள். 'வளர்ந்தால், பருமன் குறைந்து சரியான எடைக்கு வந்துவிடுவார்கள்' என்று தங்களுக்குத் தாங்களே பெற்றோர் பொய் சமாதானம் செய்துகொள்கிறார்கள். ஆனால், சிறுவர்களின் உடல்பருமன் என்பது உடனே கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினையாகும்.

குழந்தைகள் உடல் பருமனா வதை ஆரம்பத்திலேயே உணர்ந்து வாழ்வியல் முறைகளை மாற்றிக் கொள்ளாவிட்டால், அவர்கள் பெரியவர்களாகும்போதும் குண்டாக இருப்பதுடன், பல்வேறு உடல் பாதிப்புகளுக்கும் ஆளாவார்கள். அவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களில் சில...

■ நீரிழிவு நோய் ஏற்படலாம்.

■ இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அளவு அதிகரித் தல், இதய நோய்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

■ தொய்வு நோய் (மூட்டு) ஏற் பட வாய்ப்புகள் அதிகம். ஏற்கனவே மூட்டு வருத்தம் இருந்தால், அது இன்னும் வீரியமாகும். உறக்கத்தின்போது மூச்சுத்திணறல் ஏற்படும்.

■ சக குழந்தைகளோடு ஒப்பிடும்போது, இவர்கள் மன அழுத்தம், மனச்சோர்வு உடையவர்களாக இருப்பார்கள்.

■ பல்வேறு உடல், தசை, மூட்டுவாத பாதிப்புகள் ஏற்படும்.

**உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள்**

■ வயதுக்கும் உயரத்துக்கும் ஏற்ற எடையோடு ஆரோக்கியமாக இருப்பார்கள்.

■ தசை, எலும்புகள், மூட்டுகள் வலிமைபெறும். விளையாட்டு களில் ஈடுபட உடல் ஏதுவாக அமையும்.

■ ஆழ்ந்த உறக்கம் வரும். திறமையாளர்களாக, அறிவில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.

■ தன்னம்பிக்கை உடைய வர்களாக இருப்பார்கள்.

■ நோய்கள் இவர்களை எளிதில் பாதிப்பதில்லை.

**உடற்பயிற்சியை எப்போது தொடங்க வேண்டும்?**

குழந்தை, பிறந்ததில் இருந்தே இயல்பாக உடற்பயிற்சியைத் தொடங்கி விடுகிறது என்றுதான் சொல்லவேண்டும். கை கால்களை அசைப்பது, தலையை இரு புறமும் திருப்பிப் பார்த்து, உடலை அசைப்பது என்று குழந்தைகள் தங்களுக்கான உடற்பயிற்சியைச் செய்கிறார்கள்.

**5-17 வயது வரை**

■ ஐந்து வயதிலிருந்து 17 வயது வரையிலான குழந்தைகளுக்குப் பள்ளியிலும் வீட்டிலும் பல்வேறு உடற்பயிற்சிகள் அவசியம்.

■ இவர்களுக்குக் குறைந்தது தினமும் ஒரு மணிநேரப் பயிற்சி தேவை.

■ தொலைக்காட்சி, கணினி, கைபேசி, வீடியோ கேம் போன்ற வற்றில் செலவிடும் நேரத்தைக் குறைக்க வேண்டும்.

வேகமாக நடத்தல், ஓடுதல், குதித்தல், நடனமாடுதல், பூப்பந்து, உதைபந்து, ரெனிஸ், நீச்சல், வளர்ப்புப் பிராணிகளோடு நடத் தல், சைக்கிள் ஓட்டுதல் போன்ற வற்றை நண்பர்களோடு சேர்ந்து விருப்பத்தோடும் மகிழ்ச்சியோடும் செய்தாலே போதும்.

**சரியான தொடக்கம் அவசியம்**

பிறந்ததில் இருந்து ஒவ்வொரு பருவத்திலும் குழந்தைகளின் எடை, உடல் வளர்ச்சி ஆகிய வற்றைப் பெற்றோர் கண்காணிக்க வேண்டும். குறைந்தது ஒரு வருடம் கண்டிப்பாகத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். அனைத்து தடுப்பூசிகளையும் முறையாகப் போடவேண்டும்.


**உணவிலும் மாற்றம் வேண்டும்**

சிறுவயதில் இருந்தே, அதிக இனிப்பு மிகுந்த உணவுகள், கொழுப்புச்சத்து மிக்க உணவுகள், எண்ணெய் பலகாரங்கள், குளிரூட்டப்பட்ட பானங்கள், நொறுக்குத் தீனிகள் கொடுத்துப் பழக்கக்கூடாது. எல்லா சத்துகளும் உள்ள சரிவிகித உணவுகளைக் கொடுப்பதுடன், தினமும் காய்கறிகள், கீரைகள், பழங்கள் ஆகியவற்றை உட்கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுவர வேண்டும்.

எல்லாக் குழந்தைகளையும் சிறுவர்களையும் ஒரே மாதிரி உடற்பயிற்சி செய்ய அனுமதிக்கக்கூடாது. ஒவ்வொருவருக்கும் அவர்களது உடல்நிலையைப் பொறுத்து, உடற்பயிற்சி முறைகளை மாற்றி அமைக்கவேண்டும். எனவே, உடற்பயிற்சியாளரைப் பார்க்கும் முன், சரியான மருத்துவ நிபுணரை ஆலோசனை செய்வது நல்லது. குழந்தைகள், சிறுவர்களின் உடல்நிலை, உடல் தகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கான உடற்பயிற்சியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பல்வேறு பிறவிக்கோளாறுகள், இதய நோய்கள் உள்ளவர்கள், ஆஸ்துமா, நுரையீரல் மற்றும் சுவாசப் பிரச்சினைகள் உள்ளவர்கள், வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இளம் வயதிலேயே மூட்டுவாதப் பிரச்சினை உள்ளவர்கள், பல் வேறு தசை - நரம்பு நோய் மற்றும் நலிவுக் கோளாறு உள்ள வர்கள், இரத்தக் கசிவுப் பிரச்சினை உள்ளவர்கள், மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் என உடலாலும் மனதாலும் பாதிப் புள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர் களை மருத்துவரின் அறிவுரை பெறாமல் உடற்பயிற்சி செய்யவும் விளையாடவும் அனுமதிக்கக் கூடாது என்பதைப் பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# கைபேசி அபாயங்களை குறைக்கும் வழிகள்



கைபேசியை நீண்ட நேரம் கையில் வைத்திருப்பதால் கைகளின் வழியே கதிர்வீச்சு பாதிப்புக்கு நாம் உள்ளாகலாம். கையிலேயே வைத்திருப்பதற்குப் பதிலாக பலகை, மேசை போன்ற கடினமான மேற்பரப்பின் மீது வைத்து ஒரு கையாலேயே 'ரைப்பிங்', 'சட்டிங்' செய்யலாம்.

பயணங்களின் போது கைபேசியை பயன்படுத்துவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், பயணங்களின் போது சிக்னல் கிடைப்பது சிரமம். இதனால் கதிர்வீச்சு அபாயமும் அதிகம்.

உங்களுக்கு கைபேசி தேவைப்படாத போதெல்லாம் 'ஏரோப்ளேன் மோட்' ஒப்ஷனில் வைத்துவிடுங்கள். குறிப்பாக, நீங்கள் தூங்கும்போது. இது எல்லாவிதக் கதிர்வீச்சு அபாயங்களுக்கும் 'குட் பை' சொல்லிவிடும்.


எப்போதும் உங்கள் கைபேசியை உங்கள் உடலிலிருந்து 7 முதல் 10 இன்ச் வரை தள்ளியே வைத்திருங்கள். கைபேசியில் சிக்னல் இருக்கும்போது எல்லாம் கதிர்வீச்சு அபாயம் இருந்து கொண்டேதான் இருக்கும். அதனால், கைகளிலும், உங்களது சட்டைப் பையிலும் கைபேசியை வைப்பதற்குப் பதிலாக உங்களது பேர்ஸ், கைப்பை என கைபேசிக்கான இடத்தை மாற்றுங்கள்.

கைபேசியை நேரடியாகக் காதில் வைத்துப் பேசுவதைவிட நல்ல தரமான ஹெட்செட் மூலம் பேசலாம். ஹெட்போன் மூலம் பேசும்போதும் கைபேசியை கையில் பிடித்திருக்காமல் பக்கத்திலிருக்கும் நாற்காலியிலோ, எதிரில் இருக்கும் மேசையிலோ வைத்துப் பேசுவது நல்லது.

ாட்டேரி படத்தின்
கியாக ஓவியா ஒரு
டத்துக்கு முன்பு
விக்கப்பட்டார். ஆனால்
லட்சுமி, சோனம் பாஜ்வா
ியோர்தான் இப்போது
க்கின்றனர்.
ஓவியா படத்தில்
பந்தமானபோது 10
லட்சம் இந்திய ரூபா
பளமாக வாங்கினார்.
போது 50 இலட்சம்
ங்குகிறார். இதனாலேயே
வர் கழற்றி விடப்பட்டார்
ாக் கூறப்பட்டது.
ஆனால் 'சம்பளம்
ச்சினை இல்லை.
ியாவின் முக்கியத்துவமும்
றைக்கப்பட்டதாலேயே
லகினார் என்கிறது ஓவியா
ப்பு.








கதைக்கேற்ப உடலை வருத்தி நடிப்பவர் விக்ரம். சேது, பிதாமகன், காசி, அந்நியன், ஐ படங்கள் விக்ரம் உடலை வருத்தி நடித்த படங்கள்தான்.

மகாவீர் கர்ணா வரலாற்றுப் படத்தில் நடிக்கவுள்ளார் விக்ரம். கர்ணன் பாத்திரத்துக்கு ஏற்ப உடல்கட்டை மாற்றுகிறார் விக்ரம்.

இதற்காக உடற்பயிற்சிக்கூடத்தில் சுமார் 5 மணித்தியாலத்துக்கும் மேலாகத் தினமும் பயிற்சி செய்கிறார் விக்ரம்.

பாகுபலியில் போர் வீராங்கனையாக தமன்னா நடித்திருந்தார். 2 ஆம் பாகத்தில் அவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாததால் கவலையில் ஆழ்ந்திருந்தார்.

இந்நிலையில் சிரஞ்சீவி, அமிதாப்பச்சன் இணைந்து நடிக்கும் செரா நரசிம்மாரெட்டின படத்தில் போர் வீராங்கனையாக தமன்னா நடிக்கிறார்.

இந்தப் படத்தின் நாயகியாக நயன்தாரா நடிக்கிறார். இரண்டாவது நாயகியாகவே தமன்னா நடிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




கா' படத்தில்
ட்டுயிர்களை படம்
ப்பவராக நடிக்கிறார்
ன்ட்ரியா.
நாயகியை மையமாகக்
ாண்டு உருவாகும் இந்தப்
டம் க்ரைம் த்ரில்லர்
தையாக உருவாகியுள்ளது.
நாஞ்சில் இயக்கத்தில்
ருவாகும் இந்தப் படம்
ந்தமான் மலைக்காடுகளில்
டமாகிறது.
தனிடையே ஆன்ட்ரியா
டித்த விஸ்வரூபம் 2
வளியாகவுள்ளது.

■ சந்திரவதனா

# கல்லட்டியல்

துகிலுரித்த மரங்களின் நிர்வாண அழகை ரசித்தது போதுமென்று நினைத்ததோ இயற்கை, மரங்களுக்கெல்லாம் பனிப்போர்வை போர்த்திக் கொண்டிருந்தது. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குமாங்கே பொசிவது போல், இயற்கையின் இந்தச் சொரிவில் வீடுகளின் ஓடுகளும், வீதிகளும் கூடப் பனிப் போர்வைக்குள் தம்மை ஒளித்துக் கொண்டன. எங்கு பார்த்தாலும் வெண்மை. வானம், பூமி, மரங்கள், வீடுகள் எல்லாமே வெண்பனிப் போர்வையில் கண்களைக் கொள்ளை கொண்டன.

. இந்த அழகையெல்லாம் ரசிக்க பெண்களுக்கெங்கே நேரம்! அழகிய வெண்பனிக் குவியலுக்குள் எழுந்து நிற்கும் வீடுகளுக்குள் எல்லாம் பெண்கள் அவசரமாய்த்தான் திரிவார்களோ?!



காலையின் கருக்கலைக் கூடத் துடைத்தெறிந்த பனியின் வெண்மையில் ஒளிர்ந்திருந்த ஜேர்மனியின் நகரங்களில் ஒன்றான ஸ்வெபிஸ்ஹாலின் மலைச்சரிவொன்றில் அமைந்திருந்த அந்தச் சாம்பல் நிற வீட்டுக்குள் லலிதா பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தாள். எல்லாப் பெண்களுக்கும் உள்ள அதே அவசரம். அதே வேலைச் சுமைகள். ஊதிப்பற்ற வைத்த அடுப்பு மின்சாரத்தில் இயங்கினால் என்ன! ஆட்டுக்கல்லும் குளவியும் கிரைண்டர் ஆனால் என்ன! பெண்களுக்கு வேலைகளுக்குக் குறைவில்லை.

சுந்தரேசனை மட்டும் இந்தக் காலைப் பரபரப்பு எதுவுமே செய்ததாகத் தெரியவில்லை. லலிதா போட்டுக் கொடுத்த தேநீரை உறிஞ்சி உறிஞ்சிச் சுவைத்தபடி, அவன் அன்றைய பத்திரிகையை நிதானமாக வாசித்துக் கொண்டிருந்தான். ஒருவேளை சுந்தரேசனுக்கு மனைவியாக லலிதா வாய்த்தது போல், லலிதாவுக்கும் ஒரு மனைவி வாய்த்திருந்தால் லலிதாவின் காலைகளும் நிதானமாக விடிந்திருக்குமோ?

லலிதா தேநீர், சாப்பாடு எல்லாவற்றையும் ஆயத்தப் படுத்தி மேசையில் வைக்கும் போதே பிள்ளைகளின் அறைகளில் அலாரங்கள் அலறின. அலாரங்கள் எப்படித்தான் அலறினாலும், அவள் போகாமல் அவர்கள் எழும்ப மாட்டார்கள். லலிதா பிள்ளைகளின் அறைகளுக்குள் விரைந்தாள். மூத்தவன் மணிக்கூட்டின் அலார பட்டனை அழுத்திவிட்டு, மீண்டும் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தான். சின்னவனோ அலாரத்தின் அலறல் பற்றிய எந்த பிரக்ஞையும் இன்றி ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். நடுவனோ "அம்மா, இன்னும் கொஞ்சம் படுக்கப்போறன்." என்று கெஞ்சினான்.

மூன்று பேரையும் எழுப்பி, குளிக்க வைத்து, சாப்பாடு கொடுத்து, பாடசாலைக்கு அனுப்பி, சுந்தரேசனையும் வேலைக்கு அனுப்புவதற்கிடையில் அவளுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. நேரமும் 7.30 ஐத் தொட்டு விட்டதால் 'அப்பாடா' என்று அமரக்கூட முடியாமல் அவசரமாகத் தலை சீவி, சப்பாத்தையும் போட்டு, ஜக்கெற்றையும் போட்டுக் கொண்டு, கைப்பையுடன் படிகளில் ஓடி இறங்கினாள்.

வாயிற் கதவைத் திறந்ததும், சில்லென்ற குளிர்ந்த காற்று முகத்திலறைய, காது மடல்கள் விறைக்க வேறுவழியின்றி பனிக்குவியலுக்குள் காலை வைத்த போது இடது பக்கமிருந்து வந்து கொண்டிருந்த 'றூடி'யுடன் மோதப் பார்த்தாள். ஆனாலும் மிகவும் பிரயத்தனப் பட்டு மோதுவதைத் தவிர்த்துக் கொண்டாள்.

ஓடி வந்த வேகத்தில் மூச்சிரைத்தபடி ஜக்கெற்றைக் கூடப் பூட்டாமல் விரையும் அவளைச் சிரிப்புடன் பார்த்த றூடி, "உன்னோடு மோதியிருந்தால் எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும். ஒரு இனிமையான நிகழ்வைத் தவிர்த்து விட்டாயே!" என்று சலிப்படைந்த பாவனையுடன் ஜேர்மனிய மொழியில் சொன்னார்.

63 வயது நிரம்பிய ஜேர்மனியரான றூடியின் குறும்பு எப்போதும் இப்படித்தான் இருக்கும். அவரது அப்படியான குறும்பு அவளை என்றைக்குமே கோபப்படுத்தியதில்லை. காரணம் அவளின் அப்பாவின் வயதுதான் றூடிக்கும். 'அப்பாவைப் போலவே எப்போதும் குறும்பு.' நினைத்துக் கொண்டவள் சிரித்தாள்.

சற்று நேரத்துக்கு முன்பு வரை அவளுள் இருந்த இறுக்கமான நிலைமாறி மனசுக்குள் ஒரு மகிழ்வு ஓடியது. காரில் குவிந்திருந்த பனியை வழித்தெறிந்து, இறுகப் படிந்திருந்த பனியைத் தேய்க்கும் போது, குளிரில் கைவிரல்கள் கொதித்தன. விரல்களை ஊதிவிட்டு, ஊதிவிட்டு பனியைச் சுரண்டியெறிந்து விட்டு காரினுள் ஏறினாள். ஹியரிங்கைப் பிடித்த போது ஏற்கெனவே குளிரில் கொதித்த விரல்களும், கைகளும் நடுங்கின. கார் கண்ணாடிகளைப் புகார் மறைத்தது. எதுவுமே தெரியவில்லை. நெஞ்சுக்குள் குளிர்ந்தது.

"வேளைக்கே வெளிக்கிட்டு பஸ்சிலேயே போயிருக்கோணும். கராச் இல்லாமல் வின்ரறில் கார் சரி வராது." மனசு முணுமுணுத்தது. குளிரில் உடம்பே நைந்து போனது போல இருந்தது. கைவிரல்களின் நுனிகள் வெடித்து, இரத்தம் கசியத் தயாராக இருந்தது.

இந்த வதைகளைத் தாங்க மாட்டாத அவள் 'என்ன வேலை, அதுவும் இந்தக் குளிரிலை. பேசாமல் வீட்டிலை நிண்டு றேடியோ கேட்டு, புத்தகங்களை வாசிச்சு' சந்தோஷமாக வாழ முடியாமல் வேலை வேலையெண்டு... என்ன வாழ்க்கையோ.' மனதாரச் சலித்தாள்.

கார் கண்ணாடியைக் கீழே இறக்கி விட்டாள். றூடி நிதானமாகத் தனது பென்ஸ் காரைத் தேய்த்துக் கொண்டிருந்தார். அவரிடம் விடைபெற கையைக் கூடத் தூக்க முடியாத நிலையில் தலையை மட்டும் ஆட்டி விடை பெற்ற லலிதாவுக்குக் கார் ஓட்டுவதே கஷ்டமாக இருந்தது. குளிர் புகாராகக் கண்ணாடிகளை மறைத்தது. கார் வெப்பமூட்டியின் வெப்பத்தில் புகார் விலகி கார்க் கண்ணாடிகள் தெளிவாகும் வரை மிகுந்த சிரமப் பட்டாள்.

தெளிந்த கார் கண்ணாடிகளினூடே பனிப்பூக்கள் பூத்த மரங்கள் மிகவும் அழகாகத் தெரிந்தன.

அவளின் மனமோ ஊரிலிருக்கும் அப்பாவிடம் தாவி மெல்லிய சோகத்துள் ஆழ்ந்து போனது. ஸ்மார்ட்டாக காரின் பனியைத் தேய்த்துக் கொண்டிருந்த றூடியையும் முந்தநாள் தபாலில் வந்த புகைப்படத்தில் இருந்த அப்பாவின் தோற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்த்ததின் விளைவே லலிதாவின் சோகம்.

லலிதாவின் அப்பாவும் ஒரு காலத்தில் ஸ்மார்ட்டாகவும், குறும்பாகவும் இருந்தவர்தான். பெண்களைப் பெற்றதால் வாழ்க்கையின் வசந்தங்களைத் தொலைக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அவர் வாழ்க்கையை அநுபவிப்பதில் ஆசை கொண்டவர். ஆனால் பெண்களின் பிறப்பே இன்னொருவனின் கையில் ஒப்படைக்கப் படுவதற்காகத்தான் என்று கருதும் சமுதாயத்தில், அவர் நான்கு பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தது அவர் செய்த தப்பு. அதற்குத் தண்டனையாக நகைக்கும், வீடு, வாசல்களுக்குமாய் பெண்களைப் பெற்ற எல்லா அப்பர்மார்களையும் போல அவரும் தன்னையும், தன் தனித்துவமான ஆசைகளையும் கரைத்துக் கொண்டது நியம்.

இந்த நியம்தான் லலிதாவுக்குப் பிடிக்கவில்லை. சமுதாயக் கோட்பாடுகளில் நெரிபட்டவர்கள் பெண்கள் மட்டுந்தானா? பெண்களைப் பெற்றவர்களுந்தான். சமூகத்தின் மேல் அவளுக்குக் கோபந்தான் ஏற்பட்டது. அவளுக்கு இப்போதும் நல்ல ஞாபகம். அப்பாவுக்கு சுற்றுலா என்றால் நிறையவே பிடிக்கும். இலங்கையின் எல்லாப் பாகங்களையும் மனைவி, குழந்தைகளுடன் சுற்றிப் பார்த்து விட்ட அவருக்கு இந்தியாவின் மகாபலிபுரம் போன்ற அழகிய இடங்களையும் மனைவி குழந்தைகளுடன் சுற்றிப் பார்த்து விட வேண்டுமென்ற அளவிலாத ஆசை.

அப்போ அவருக்கு சம்பளத்துடன் 'அரியஸ்' ஆக ஒரு தொகைப் பணம் வந்திருந்தது. அப்பணத்தில் சுற்றுலாவை மேற்கொள்வதாகத்தான் அவர் எண்ணியிருந்தார். அரியஸ் பணத்துடன் வீட்டுக்கு வரும் போதே அவர் முகத்தில் உற்சாகம் பொங்கியிருந்தது.

அந்த நேரம் பார்த்துத்தான் லலிதா பூப்பெய்த வேண்டுமா? வீட்டிலே நடந்த ஒரு சந்தோசத்தில் இன்னொரு சந்தோசம் கரைந்து விட்டது. பெரியவளாகி நிற்கும் லலிதாவையும், தொடர்ந்து வரிசையில் நிற்கும் மூன்று பெண் குழந்தைகளையும் காட்டி நகை, நட்டு, காணி, வீடு என்று அவர்களுக்குச் சேர்க்க வேண்டிய கட்டாயத்தையும் கூறி லலிதாவின் அம்மா, அப்பாவின் சுற்றுலா ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# பயிர்களை மேய்கிறதா வேலி?

வங்கியாளர் ஒருவரை அடித்துத் துவைத்துவிட்டு அவரின் காரைப் பறித்துச் சென்றார்கள் கொள்ளையர்கள். துரதிர்ஷ்டத்திலும் இவருக்கு ஓர் அதிர்ஷ்டம். 2 வருடங்களுக்குப் பின்னர் கொள்ளையடிக்கப்பட்ட தனது காரைக் கண்டார்.




அதனை ஒரு பொலிஸ் அதிகாரி பயன்படுத்துவதை அறிந்து அதிர்ந்து போனார் அந்த வங்கியாளர்.

ஆபிரிக்க நாடான கானாவில் 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இச்சம்பவம் இடம்பெற்றது. 32 வயதான சாமுவெல் போர்சன் என்ற இளம் வங்கியாளர் தனது மடிக் கணினி உட்பட சில பெறுமதியான பொருட்களுடன் தன் காரில் சென்று கொண்டிருந்தபோது, ஆயுதபாணிகளாக வந்த நால்வர், இவரை மூர்க்கத்தனமாகத் தாக்கிவிட்டு, காரைக் கொண்டு சென்றனர். இவரைத் தாக்கியவர்கள், பொலிஸார் போல உடையணிந்து இருந்தனர் எனவும், தாக்கியவர்களில் ஒருவர் கொல்ல வேண்டாம் எனக் கூறியதால், தன்னை கடலில் வீசிச் சென்றிருந்தனர் எனவும் அவர் ஒரு செய்தியாளருக்கு கூறியிருந்தார்.

3 மாத மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர்தான் அவரால் மீண்டும் பணிக்குத் திரும்ப முடிந்தது. 2 வருடங்கள் கழித்து அவரின் கார் கிடைத்தது. காரை பொலிஸ் அதிகாரிதான் கொள்ளை யடித்திருந்தார். காரைக் கொள்ளையடித்து, 2 வருட காலம், சொந்தம் கொண்டாடியது போதாது என்று, அதுவரை காலத்துக்கும் காரைப் பராமரித்து, திருத்துதல் வேலை செய்ததற்கான செலவைப் பொறுப்பேற்க வேண்டும் என்று அந்தப் பொலிஸ்காரர் வங்கியாளரைக் கேட்டிருப்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

இது தொடர்பில் வங்கியாளர், பொலிஸாரிடம் முறையிட்டார். எனினும் அந்தப் பொலிஸ் அதிகாரி பணம் கேட்டதற்கான வலுவான ஆதாரம் எதுவுமில்லை எனக்கூறி, மேலிடம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

புல்லைக் களவாக மேய்ந்ததோடு காணிக்கும் சொந்தம் கொண்டாடுகிறார்கள்...!



# நீளத்திலிருந்து குட்டைக்கு

"மைக்ரோ அவன்" நமக்கு புதிதான ஒன்றல்ல. ஆனால் "மைக்ரோ" மாளிகைகள் பற்றி அறிந்திருக்கிறீர்களா? பணத்தில் புரள்பவர்கள் பிரமாண்டமான மாளிகைகளை கட்டுவது, ஊரறிந்த சங்கதி. ஹொலிவூட் நடிகர்கள், பொப்பிசைப் பாடகர்கள் என்று பலர் அமெரிக்காவில் பணத்தில் புரள்பவர்கள். இவர்களின் வீடுகளைப் பராமரிக்கவே பல [illegible]ாரர்கள் தேவைப்படுவர். இப்போது இந்தப் பணக்காரர்களின் மோகம் "மைக்ரோ" மாளிகைகள் பக்கம் திரும்பியுள்ளன.

4042 சதுர அடிக்குள், அமெரிக்காவின் புளோரிடா நகர் பாம் பீச்சிலிருந்து 30 நிமிட கார் ஓட்டத்தில் வந்தடையக்கூடிய இடத்தில் அதிஆடம்பர மைக்ரோ மாளிகை ஒன்று கட்டப்படுகின்றது. ஒரு கோடி டொலர் - எம் நாட்டு மதிப்பில் சுமார் 150 கோடி ரூபாவில் -முதலிடக்கூடிய , குறைந்த ஆள் வசதியுடன் நிர்வாகிக்கக் கூடிய ஒரு ஆடம்பர வீட்டை கட்டிக் கொண்டிருக்கிறார் பிராங் மக்கினி என்பவர்.

முன்பெல்லாம் பல கோடிகளை வாரியிறைத்து சமுத்திரங்களை எதிர்த்தாற்போல பிரமாண்டமான வீடுகளைக் கட்டியவர்கள் - இப்போது சிறு மாளிகைகளைக் கட்ட ஆர்வம் காட்டுகிறார்கள். இவை சிறியன என்ற . பெயரோடு அறிமுகமானாலும், ஆடம்பரத்துக்கு இங்கே பஞ்சம் இராது. மூன்று படுக்கை அறை, நான்கு குளியல் அறை, இதைவிட வெளிக் குளியலுக்காக , மரங்கள் வளர்க்க இடம், இரண்டாம் மாடியிலும் குளியலறை. இதுதான் இவரது மைக்ரோ மாளிகை.

நீளப் பாவடை கட்டியவர்கள் குட்டைப் பாவடைக்கு மாறுகிறார்களோ...?

# வான் கோழி மயிலாகுமா...?



"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே கல்லாதான் கற்ற கவி " என்ற மூதுரை கவி வரிகளை கேள்விப் பட்டிருப்பீர்கள்...

இங்கே ஒரு 8 வயதுப் பையன், தினசரி 4 மணி நேரம் தன்னைக் கடும் பயிற்சிக்கு உட்படுத்தி வருகிறான். ஏன் தெரியுமா? தானும் உலகறிந்த இன்னொரு புரூஸ் லீ ஆக வேண்டும் என்ற ஆசை இவனுக்கு!

இவனும் வான்கோழியா? அப்படிச் சொல்ல முடியவில்லை. இவனது கடும்பயிற்சி இவனுடலை அடியோடு மாற்றியமைத்துள்ளது. இந்தச் சிறுவன் பெயர் இமாய். ஜப்பானின் நாறா என்றும் பிரதேசத்தைச் சேர்ந்தவன். 1972 இல் வெளியாகிய புரூஸ் லீயின் திரைப்படம் ஒன்றைப் பார்த்து விட்டு, 3 வருடங்களுக்கு முன்பு, தானும் ஒரு புரூஸ் லீ ஆக வேண்டுமென்ற ஆசையை தன் மனதில் விதைத்தவன்!

இவனை இப்பொழுது உலகம் அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, இவன் அதீத திறமைக்கு அங்கீகாரமும் கிடைத்திருக்கின்றது. இந்தப் புகழின் போதை தலைக்கேறாமல், தன் அபிமான புரூஸ் லீ தேர்ச்சி பெற்ற மார்ஷல் கலையில் போதிய பயிற்சி பெறுவதில் முனைப்பாக இருக்கிறான் இந்த 8 வயதுச் சிறுவன்.

தினமும் காலை 6 மணிக்கு படுக்கையிலிருந்து எழுந்து, ஒன்றரை மணி நேரப் பயிற்சியில் ஈடுபடும் இந்தச் சிறுவன். பாடசாலையிலிருந்து திரும்பி வந்ததும், ஒரு மணி நேரம் ஓட்டப் பயிற்சி பெறுகிறானாம். இதன் பிறகு கால்களை, கைகளை அசைத்து, ஆட்டி 2 மணி நேரம் "அடிகளுக்கான" பயிற்சி. மொத்தம் நான்கரை மணிநேரப் பயிற்சி! முகநூலில் இவனைச் சுற்றி 290,000 ஆதரவாளர்கள் வட்டமடிக்கிறார்களாம்.

முளையிலே தெரிகின்றது விளையும் பயிர்!

# நாடகமன்றோ நடக்குது...

கழுத்தில் ஒரு ஸ்டெதெஸ்கோப்பை மாட்டிக் கொண்டு, வெள்ளை அங்கியையும் அணிந்து கொண்டு, டாக்டர்களோடு டாக்டராக ஒருவன் 5 மாதங்கள், நாடகமாடி இருக்கிறான். எந்தப் பயிற்சியுமின்றி இந்தியாவிலேயே மிகப் பிரபலமான மருத்துவ நிலையத்தில், தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், தாதிகள் நடுவில் ஒரு மருத்துவனாக 5 மாத காலத்தை இவனால் எப்படி ஓட்ட முடிந்தது?

புதுடில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிலையம் மருத்துவ சேவையில் முன்னணி நிலையமாக திகழ்கின்றது. டாக்டர் அட்னான் குராம் என்ற அந்த 19 வயது இளைஞருக்கு எந்தவித மருத்துவப் பயிற்சியோ அல்லது கல்வித் தகைமையோ இல்லை. ஊழியர்களின் சம்பளப் பட்டியலிலும் அவரின் பெயர் இல்லை. இன்ஸ்டகிராமில் தன்னை டாக்டர் அட்னான் குராம் என்ற வெளிப்படுத்திக் கொண்டு, மருத்துவர்களுக்காக அடிக்கடி இடம்பெறும் பல நிகழ்வுகளில் இவன் கலந்து கொண்டிருக்கிறான். மருத்துவமனை தங்குநர் மருத்துவர்கள் அமைப்பின் தலைவரான ஹர்ஜித் சிங், ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் சம்பந்தப்பட்ட இளைஞன் அங்குள்ள மருத்துவர்களிடம் தன்னை வெவ்வேறு விதங்களில்




அறிமுகப் படுத்தியிருக்கிறான் எனக் கூறியிருக்கிறார்.

எப்படி இவன் எல்லா மருத்துவர்கள் கூட்டத்திலும் சமுகமளிக்கிறான், எப்படி இவனுக்கு நேரம் கிடைக்கிறது என்று தாம் வியந்ததாகக் கூறியிருக்கிறார். ஆள்மாறாட்டக் குற்றச்சாட்டு செய்தவன் என்று பொலிஸாரிடம் கைதாகி இருக்கும் இவன், விசாரணைகளின் போது கதைகளைத் திரித்து, நேரத்துக்கு ஒரு கதை சொல்லி வருகிறான் எனக் கூறப்படுகின்றது. ஏன் இப்படி செய்தாய்...? எனக் கேட்டபோது, தான் விரும்பியே அதைச் செய்தார் எனவும், ஒருநாள் நான் ஒரு டாக்டராவேன் என்றும் அந்த இளைஞன், விசாரணையில் கூறியிருக்கிறான். ஆனாலும் அவனின் மருத்துவ அறிவைப் பார்த்துப் பொலிஸார் வியந்து போய்விட்டார்கள்.

இன்றைய நாடகம் நாளைக்கு நிஜமாகுமா?

# 20கி.மீ. செய்தி கடத்தும் முதல் தொடர்பு சாதனம்

## அமேசன் பழங்குடிகளின் கண்டுபிடிப்பு





இன்றைய நாள்களில் பக்கத்து அறையில் இருப்பவரைக் கூப்பிடக்கூட போன் செய்கிறோம், வட்ஸ்அப்பில் மெசேஜ் அனுப்புகிறோம். இல்லையென்றால் மிஸ்ட் கோல் கொடுத்தே கடுப்பேத்தி வர வைத்து விடுகிறோம். இந்த இணையமும் கைபேசிகளும் வந்தபிறகு கடல் கடந்து இருப்பவரைக்கூட தொடர்புகொள்வது அவ்வளவு எளிதாகிவிட்டது.

ஆனால், இவையெல்லாம் இல்லாத காலத்தில் ஒருவர் மற்றவரைத் தொடர்புகொள்ள நிறைய வழிமுறைகளை வைத்திருந்தனர். எல்லாமே கொஞ்சம் கடினமானதாகத்தான் இருந்தன. செய்தி கொண்டு போன தூதுவன் ஒருவன் நெடுந்தூரம் ஓடியே இறந்ததில் உருவானதுதான் மரதன் ஓட்டம். இப்படி வரலாறு நெடுக்க செய்தியைக் கடத்துவதைக் குறித்த நிறைய கதைகளும் தகவல்களும் இருந்துகொண்டேதான் இருக்கின்றன.

இருபது, முப்பது கிலோமீற்றர் தள்ளியிருக்கும் கோயிலில் வழிபாடு முடிந்தபின்தான் அன்றைய நாளை ஆரம்பிக்கும் மன்னர்களும் இருந்ததாகச் சொல்வதுண்டு. அந்த இருபது முப்பது கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் செய்தியை எப்படி உடனே கடத்த முடியும் என ஆச்சரியங்களும் கேள்விகளுமாய்த்தான் இந்தக் கதைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் உண்மையாக நடந்தவைதான். நாம் இன்றும் ஆச்சரியப்படும் வகையில் அறிவியல் ரீதியாக முன்னேறியே இருந்துள்ளார்கள். ஆனால், இன்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் உதவியின்றி பல மைல்கள் தொலைவுக்கு எளிதில் தொடர்பு கொள்கின்றனர் அமேசன் காடுகளில் வாழும் போரா (Bora) எனும் பழங்குடி மக்கள்.

அமேசன் காடுகளின் வடமேற்குப் பகுதியில் காணப்படும் போரா பழங்குடியின மக்கள் கொலம்பியா மற்றும் பெரு ஆகிய நாடுகளில் பரவிக் காணப்படுகின்றனர். மனிதன் எழுப்பக்கூடிய ஒலியானது அதிகபட்சமாக 200 மீற்றர் வரைதான் செல்லும். ஆனால், போரா பழங்குடியின மக்கள் 20 கிலோமீற்றர் வரைக்கும் ஒலியின் மூலம் தகவல்களைப் பரப்புகின்றனர். அவர்கள் பயன்படுத்தும் ட்ரம் போன்ற இசைக்கருவிதான் இதற்குக் காரணம். அதன் மூலம் இவர்கள் எழுப்பும் ஒலியானது எளிதில் 20 கிலோமீற்றர் தூரத்துக்குப் பயணிக்கிறது. இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால் சாதாரண உரையாடலில் இருந்து முக்கியமான அறிவிப்புகள் வரை எல்லாவற்றுக்கும் இந்த ட்ரம்மின் மூலம் ஏற்படுத்தும் ஒலியைப் பயன்படுத்துகின்றனர்.

போரா பழங்குடியின மக்களின் மொழியும் இந்த ட்ரம்மின் மூலம் எழுப்பப்படும் ஒலியும் ஏற்க்குறைய ஒரே மாதிரியாக இருப்பதாக புதிய ஆய்வு ஒன்று, Journal Royal Society Open Science இல் வெளியிடப்பட்டுள்ளது. அதாவது அந்த ட்ரம்மின் ஒலியின் ரிதமும் மொழியின் ரிதமும் ஒன்றாக உள்ளது. அவர்களின் மொழியின் கூறுகள் ஒலி வடிவமாக மாற்றப்பட்டுள்ளது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதனால்தான் அந்த மக்கள் எவ்வித பயிற்சியும் இல்லாமல் இந்த ட்ரம் ஒலியின் மூலம் சொல்லப்படும் தகவல்களை எளிதில் புரிந்துகொள்கின்றனர்.

அவர்கள் பயன்படுத்தக் கூடிய இந்த ட்ரம்கள் மன்கோர் ட்ரம்ஸ் (Manguare Drums) என்று அழைக்கப்படுகிறது. பாரம்பரியமாகப் போரா பழங்குடியின மக்களின் வீடுகளில் இந்த ட்ரம்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு ட்ரம்மை வைத்திருக்க வேண்டும் என்ற வழக்கமும் இங்கு இருக்கிறது. உருளை வடிவில் மரப்பீரங்கிகளைப் போன்று காணப்படும் இந்த ட்ரம்மின் மேல் முனையில் பிளவு ஒன்று காணப்படுகிறது. மரத்தால் செய்யப்பட்ட இரு உருளைகளும் 6.5 அடி இருக்கின்றன. அதில் மரத் தடியை வைத்து அடிப்பதன் மூலம் ஒலியை எழுப்புகின்றனர். போரா பழங்குடியின குழுக்களில் இருக்கும் அனைவரும் இந்த ஒலி வடிவத் தகவல்களைப் புரிந்து கொள்கின்றனர். இந்த ட்ரம்மின் மூலம் நான்கு வகையான ஒலிகள் எழுப்பப்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவித மான உணர்வைச் சொல்லப் பயன்படும் ஒலிக்குறிப்புகள்.

அதுமட்டுமில்லாமல் திருவிழா நேரத்தில் இசைக் கருவியாகவும் அறிவிப்புக்களை மக்களிடையே சேர்ப்பதற்கும் சாதாரணமாகப் பேசுவதற்கும் பயன்படுத்துகின்றனர். மன்கோர் ட்ரம்ஸ் மூலம் எந்தவகையான செய்தியையும் தகவல்களையும் போரா பழங்குடியின மக்களிடையே சொல்ல முடியும். இந்த மக்களின் அறிவிப்புகளானது 15 வார்த்தைகளுக்கும் 60 தாளங்களுக்கும் இருக்கிறது. இன்னும் நெருக்கமாக இந்த ட்ரம் ஒலிகளைக் கேட்டால் அந்த மக்கள் பேசுவதைப் போலவே இருக்கிறது ஆய்வாளர் ஃப்ரன்க் செய்ஃபர்ட் (Dr Frank Seifart).

அழிந்து வரும் பேச்சு வழக்குகளை ஆவணப்படுத்தி வருகிறார் மொழியியல் ஆய்வாளரான ஃப்ரன்க் செய்ஃ பர்ட் (Dr Frank Seifart). இந்தப் போரா மொழியின் பேச்சு வழக்கை ஆவணப்படுத்தச் சென்றபோதுதான் இந்தத் தகவல் பரிமாற்றத்தைக் கண்டிருக்கிறார். ஆம்ஸ்டர்டம் பல்கலைக்கழகத்தைச் (University of Amsterdam) சேர்ந்த ஃப்ரன்க் செய்ஃபர்ட் மற்றும் சில ஆய்வாளர்கள் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டபோதுதான் இந்தத் தகவல் தெரிய ஆரம்பித் திருக்கிறது. தனித்துவமான இந்த ட்ரம்கள் இப்போது 20 மட்டுமே உள்ளது.

மேலும் போரா மொழியானது ஸ்பானிஷ் மொழியின் தாக்கத்தால் மெதுவாக அழிந்து வருகிறது. அவர்களது போரா மொழி அழிந்தால் இந்த ட்ரம் ஒலி தகவல் பரிமாற்றமும் அழிந்துவிடும் என்கின்றனர் ஆய்வாளர்கள். இப்போதிருக்கும் 20 ட்ரம்களில் கூட ஐந்தாறுதான் பயன்பாட்டில் உள்ளது. சிலர்தான் அதை வாசிக்கிறார்கள். 1900-களில் 15,000 பேர் இருந்த போரா பழங்குடியினர் இப்போது வெறும் 1,500 பேர் மட்டுமே இருக்கின்றனர். இதுவும் மிக முக்கியமான காரணம், சட்டத்துக்குப் புறம்பாக அமேசன் காடுகளில் மரம் வெட்டுவதில் இவர்களைப் பயன்படுத்துவது போன்ற பல்வேறு விடயங்களால் இந்தப் பழங்குடியின மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். அடர்த்தியான காடுகளுக்குள் செல்லச் செல்ல கைபேசியில் சிக்னல் கிடைப்பதுக்கூட அரிதுதான். சாதாரண சூழ்நிலைகளிலும் சரி இக்கட்டான சூழ்நிலைகளிலும் சரி காடுகளில் செய்தித் தொடர்புக்கு இவை பெரிதும் கைகொடுக்கும்.

# வயது வந்தோர்க்கு மட்டும் 24



■ ஜெயராணி

குழந்தைகள் நம் சொற்களை விடவும் செயல்களையே பின்பற்றுகின்றன. சமூகத்தைச் சீரழிக்கும் குணக்கேடுகளான வன்முறை, வன்மம், வெறுப்புணர்வு, ஒழுக்கக்கேடு, பாகுபாடு, ஆதிக்கம் போன்ற வயது வந்தோருக்கான விடயங்களுக்கு, குழந்தைகளை நாம் எல்லா வகையிலும் பழக்கப்படுத்துகிறோம். இந்த குணக்கேடுகள்தான் தவறான உளவியலைக் கட்டமைத்து ஒரு குழந்தை தீய மனிதராக வளரக் காரணமாக அமைகிறது. ஆனால், நம்மைப் பொறுத்தவரை செக்ஸைத் தவிர எதுவுமே வயது வந்தோருக்கான விடயமே கிடையாது. இந்த கருத்தியலை நம் மனதில் விதைத்தவை திரைப்படங்கள். 'ஏ' சான்றிதழ் எனில் அதில் பாலியல் காட்சிகள் இடம் பிடித்திருக்கும் என அர்த்தம் கொள்கிறோம். திரைப்படங்களை எந்தெந்த வயதினர் பார்க்கலாம் எனச் சான்றிதழ் வழங்கும் சென்சார் போர்டின் விதிப்படி 'ஏ' சான்றிதழ் என்பது பாலியல் காட்சிகளுக்கானது மட்டுமன்று, வன்முறைக்கும் வன்மங்களுக்கும்கூட அது பொருந்துகிறது.

ஆனால், பறந்து பறந்து அடிப்பது, இரும்பு ராடால் தாக்குவது, கத்தியால் கழுத்தை அறுப்பது, கை காலை உடைப்பது, வாயில் ஓங்கிக் குத்து விடுவது போன்ற அதீத வன்முறைக் காட்சிகள் நாயகர்களின் சாகசமாக ஏறக்குறைய எல்லாத் திரைப்படங்களிலுமே இடம் பெறுகின்றன. இப்படியான காட்சிகளை குழந்தைகளுடன் உட்கார்ந்து கோக் குடித்துக் கொண்டே நாமும் பார்க்கிறோம். இதனால், குழந்தை உளவியல் ரீதியாக எத்தகைய மாற்றத்தை அடைகிறது என நாம் கவலைப் படுவதில்லை. ஒரு சுப்பர் ஹீரோவின் தீவிர ரசிகனான என் உறவினரின் 9 வயது சிறுவன் தன் தம்பியின் முகத்தில் கத்தியால் கோடு போட்டு விட்டான். கூடவே பன்ச் டயலொக்கும் பேசியிருக்கிறான். இப்படியான விளைவுகள் சமூகக் கேடு இல்லையா?! என்னைக் கேட்டால் மாஸ் ஹீரோக்களின் ஹீரோயிஸப் படங்கள் எதுவும் குழந்தைகள் பார்க்கத் தகுதியற்றவை!

வன்முறை மட்டுமன்று, சாதிப் பெருமை பேசும், பெண்களை இழிவுபடுத்தும், தீய பழக்கங்களை ஊக்கப்படுத்தும் காட்சிகளைக் கொண்ட படங்களை எல்லாம் நாம் குழந்தைகளுடன் பார்க்கிறோம். இதில் நமக்கு எந்தச் சங்கடமும் இல்லை. ஆணும் பெண்ணும் நெருக்கமாக இருக்கும் பாலியல் காட்சி வந்தால் பதறுவதைப்போல வன்முறைக்கும் வன்மங்களுக்கு நம் மனம் சஞ்சலப்படுவதில்லை. இப்படியான திரைப்படங்களை இயக்குவோர் 'சமூகத்தில் நடப்பதைத்தானே காட்டுகிறோம்' என வாதிடுவார்கள். சமூகத்தில் நடப்பதைக் காட்டுங்கள், தவறில்லை. எல்லா வகையான படைப்பு உரிமையும் உங்களுக்கு இருக்கிறது. ஆனால், அதைக் குழந்தைகள் பார்க்க வேண்டுமென ஏன் நினைக்கிறீர்கள் என்பதுதான் என் கேள்வி. 'ஏ' சான்றிதழ் கொடுத்தால் அதை ஏன் பெரிய பிரச்சினையாக்குகிறீர்கள்? 18 வயதிற்கு உட்பட்டோரால் படத்திற்கு வியாபாரம் என்று கருதினால் வயது வந்தோருக்கான விடயங்களைத் தள்ளி வைக்க வேண்டியது இயக்குநர்களின் கடமை.

சினிமா மட்டுமன்று, முற்பகல் தொடங்கி நாள் முழுவதும் ஓடிப் பின்னிரவு வரை நீடித்து, பலரது மன ஆரோக்கியத்தையும் இரவுத் தூக்கத்தையும் கெடுக்கும் தொலைக்காட்சித் தொடர்கள் அனைத்தும் வயது வந்தோருக்கான விடயம்தான். அதில் காட்டப்படாத வன்முறையா, வன்மமா, மூட நம்பிக்கைகளா? கொலை செய்வது, சூழ்ச்சி பண்ணுவது, பிறர் மனைவியை அபகரிப்பது, பேய் பிடிப்பது என மனித வாழ்வின் அத்தனை எதிர்மறை விடயங்களும் சீரியல்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஏறக்குறைய எல்லா வீடுகளிலுமே அம்மாக்களோடும் பாட்டிகளோடும் அமர்ந்து குழந்தைகள் தொடர் நாடகங்களைப் பார்க்கின்றன. இன்னும் ஒருபடி மேலே ரியாலிட்டி ஷோக்கள். குறிப்பாக குடும்பச் சண்டைகளை அம்பலப்படுத்தும் நிகழ்ச்சிகளை நடுக்கூடத்தில் அமர்ந்து குடும்பமாகப் பார்க்கின்றனர். இது குழந்தைகளின் உளவியலில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்துவது குறித்து நாம் கவலைப்படுவதே இல்லை. அவ்வாறே சமூகவலைத்தள வீடியோக்களும்.

ஆக, எது வயது வந்தோருக்கானது என அறிவு பெறுவது வயது வந்தோரான நமது அடிப்படைக் கடமை எனக் கருதுகிறேன். இந்தத் தொடர் தொடங்கப்பட்டபோது தொடர்புகொண்ட சிலர், "அருமையாக எழுதியிருக்கிறீர்கள். என் குழந்தையிடம் படிக்கக்கொடுக்கிறேன்" என்றார்கள்.

"நீங்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் வயது வந்தோர்க்கு மட்டும்" எனத் தலைப்பு வைக்கப்பட்டுள்ளது" என்றேன். குழப்பமடைந்தார்கள். இத்தொடரில் விவாதிக்கப்பட்ட விடயங்களைக் குழந்தை அறியுமானால், "நம் பெற்றோர் என்னென்ன தவறுகள் செய்கின்றனர்" எனக் குழந்தை ஒப்புநோக்கத் தொடங்கும். பெற்றோர் மீது மரியாதையை இழக்கவும் வாய்ப்பிருக்கிறது.

குழந்தை வளர்ப்பு என்பது வயது வந்தோருக்கான விடயம்தான். அம்மாக்கள் அப்பாக்களையும், அப்பாக்கள் அம்மாக்களையும் குழந்தைகள் முன் வளர்ப்பு முறை குறித்துக் குறைகூறுவது இன்றும் நடக்கிறது. இப்பழக்கத்தை உடனடியாக மாற்றிக் கொள்ளுங்கள். இதனால் பெற்றோராகிய உங்கள் மரியாதை காப்பாற்றப்படும்.

குழந்தையைக் குழந்தையாக வாழ அனுமதிக்காத குடும்ப/சமூகச் சூழல்தான் ஒரு தலைமுறையின் மீது தொடுக்கப்படும் மோசமான வன்முறை என்பேன். நம் வீடு குழந்தைகளுக்கானதாக இல்லை. இந்த உலகம் குழந்தைகளுக்கானதாக இல்லை. இந்த வாழ்க்கையும் குழந்தைகளுக்கானதாக இல்லை. பெரியவர்களின் உலகில் பெரியவர்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒரு பெரிய மனுசத்தனமான வாழ்வைத்தான் குழந்தைகள் பரிதாபமாக வாழ்கின்றன. நாற்பக்கமும் பாருங்கள். குழந்தைகளுக்கென என்ன இருக்கிறது? அவர்கள் அறிவு பெற, இளைப்பாற, பொழுது போக்க, கொண்டாடி மகிழ பிரத்தியேகமாக என்ன வைத்திருக்கிறோம்! நம் விருப்பம்தான் அவர்களது விருப்பமும். நம் கனவுதான் அவர்களுடையதும்.

நம் தேடல்களுக்குதான் அவர்கள் ஓடுகின்றனர். பரந்துவிரிந்த இந்த வயது வந்தோர்க்கான உலகத்தில் சின்னஞ்சிறிய இடம்கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இன்றைய குழந்தைகளுக்கு childhood என ஒன்றே கிடையாது. எல்லாமே adulthood தான். நமக்கும் குழந்தைகளுக்கும் இடையில் இயற்கை இயங்கியல் கிழித்திருக்கும் கோட்டை அழித்துவிட்டு நாம் அவர்களது ஏரியாவுக்குள் அத்துமீறுகிறோம் அல்லது நம் எல்லைக்குள் அவர்களை இழுக்கிறோம். இரண்டின் விளைவும் ஒன்றுதான். அது சீரழிவு.

பெரியவர்களாகிய நாம் முன்னே நடந்து வழிகாட்ட, குழந்தை பின்னே நடந்து வரும். இழுத்துக்கொண்டு ஓட வேண்டிய அவசியம் இல்லை. திரும்பிப் பார்க்க வேண்டிய தேவையும் இல்லை. நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது ஒன்றே ஒன்றைத்தான். நாம் அடியெடுத்து வைக்கும் திசை சரியானதாக இருக்கிறதா என்பது மட்டுமே! அத்திசையில் வன்முறை, வன்மம், காழ்ப்பு, வெறுப்பு, பாகுபாடு, ஒழுக்கக்கேடு எதுவும் இல்லை தானே! அன்பு, அறம், அமைதி, அறிவு ஆகியவை நிறைந்திருக்கின்றனதானே! திரும்பிப் பார்க்காமல் தலை நிமிர்ந்து நடவுங்கள். உங்கள் பிள்ளை வழிதவறிப் போகாது!

(முற்றும்)

# அபாயா அபாய...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களே பதாகைகளையும் எழுதிக் கொண்டு வந்ததால் அவை சில சமயங்களில் பிறருக்கு மனவருத்தைத்தைத் தோற்றுவித்திருக்கலாம். அதற்குப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்த சம்பவத்துக்கு உதாரணமாக ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறேன்.

'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சபாலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாறியபோது இந்துக் கல்லூரிக்கு ஒரு முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மாற்றலாகி வந்தார். அவர் நீண்ட தாடியோடு வந்து பணிக்கு வந்தபோது அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தாடியை மழித்துவிட்டு வருமாறு சொன்னர் அதிபர். அப்போது கல்வி அமைச்சராக இருந்தவர் பதியுதீன் மஹ்மூத். அந்த ஆசிரியர் திரும்பிப் போய் அமைச்சரிடம் முறையிட்டார். மந்திரியோ அதிபர் கூறியபடி நடக்குமாறு சொன்னாரே ஒழிய சமயம் என்று விதண்டாவாதம் பேசவில்லை. மந்திரி என்ற வகையில் பொதுவான நன்மை ஒன்றின் மீதே அவர் கவனம் செலுத்தியிருந்தார். மந்திரியாக இருந்தபடியால் அவர் அதிபரைக் கட்டாயப்படுத்த தாடியுடன் கல்வி கற்பிக்க அனுமதி வழங்கியிருக்கலாம். அவர் அதை ஏன் செய்யவில்லை?

ஆனால், திருகோணமலை அபாயா தொடர்பான சம்பவத்தில் பாடசாலையின் அதிபர் இது பற்றி கல்வித் திணைக்கள அதிகாரிக்குத் தெரியப்படுத்தியதும் அந்தக் குறிப்பிட்ட ஆசிரியர்களை அபாயவுடன் கல்வி கற்பிக்க அனுமதிக்குமாறு கூறியிருக்கிறார் அந்த அதிகாரி. அதிபர் தொடர்பு கொண்டவுடன் பாடசாலை பற்றியும், அதன் மரபு பற்றியும், அங்கு எவ்வகையான மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதையும், அங்கு ஒரு முஸ்ஸிம் ஆசிரியை அபாயாவுடன் போனால் எத்தகைய உளவியல் சிக்கல்களை அது ஏற்படுத்தும் என்றும் சற்று யோசியாது அதிபருக்குப் பதில் கொடுத்திருக்கிறார் அந்த அதிகாரி.

நேற்றைய தினம் ஒரு இணையத்தளச் செய்தி ஒன்றைப் பார்த்தேன். அதில் ஒரு முஸ்லிம் மதத்தவர் மற்றவரைப் பார்த்து பின்வருமாறு ஒரு கேள்வி கேட்டிருந்தார். "இதையே ஒரு முஸ்லிம் பாடசாலையில் உள்ளவர்கள் அங்குவரும் இந்து ஆசிரியைகளை அபாயாவுடன் வரச் சொன்னால் நிலைமை என்னாவது?" என்று அவர் கேட்டிருந்தார். அந்தப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு ஆசிரியைகள் அபாயா அணியாது வருவது ஒரு உளவியல் சிக்கலைத் தோற்றுவிக்குமானால் இந்து ஆசிரியைகளை சாதாரண முஸ்லிம் ஆசிரியைகள் போல முக்காடு அணியச் சொல்லிக் கேட்கலாம். ஆனால் அது அபாயவாக இருக்காது.

சவூதி அரோபியாவில் உள்ள இந்துப் பெண்கள் வெளியே போகும்போது முக்காடிட்டுச் செல்வது வழக்கம். மதீனாவிலுள்ள பெரிய வாகனத் தரிப்பிடமொன்றின் நிர்மாணத்தில் பிரதம பொறியியலாளராக ஐயர் ஒருவர் பணியாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்தபோது அவர் அவரது பூசைப் பொருட்களுடன் மதீனாவரை செல்ல சவூதி அரசு அனுமதித்திருந்தது நான் அறிந்த விடயம். பொதுவாக இந்துக்களின் நிழல்கூட மதீனாவில் படுவதற்கு சவூதி அரசு அனுமதிப்பதில்லை என்பதுதான் உண்மையான விடயம். அந்த ஐயர் பணியாற்றியதில் சவுதி அரசுக்கு பல லட்சம் ரூபா இலாபம் கிடைத்தது. நன்மை கருதிச் சட்டங்கள் தளர்த்தப்படுவது நியாயமே. திருகோணமலைப் பாடசாலையிலும் கல்வி கற்க வருகின்ற சிறுவர்கள் நன்மை கருதி அந்த முஸ்லிம் ஆசிரியைகள் அபாயாவை பற்றிச் சற்று யோசித்திருக்கலாம். ஏற்கனவே முஸ்லிம் ஆசிரியைகள் அபாயா இல்லாது சாதாரண உடையில் வந்திருக்கிறார்கள். எனவே இதன் பின்னணி அரசியல் என்னவாக இருக்கலாம்? மக்களுக்காகச் சட்டங்களே ஒழிய சட்டங்களுக்காக மக்கள் அல்ல என்பதைப் புரிந்து கொண்டால் எல்லாம் நன்மையே! ●

# கல்லட்டியல்....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மாவின் விருப்பப்படி அப்பணத்தில் லலிதாவுக்குக் கல்லட்டியலும், மிகுதியில் தங்கைமாருக்குச் சில நகைகளும் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சில நாட்களில் அப்பாவின் அரியஸ் பணம் சிவப்பு வெள்ளைக் கற்களுடன் அழகிய அட்டியலாகவும், சங்கிலிகளாகவும், காப்புகளாகவும் மாறிவிட்டது. லலிதா அட்டியலைப் போட்டுக் காட்டிய போது அப்பாவின் முகத்திலும் பூரிப்புத் தெரிந்தது. ஆனாலும் அப்பாவின் சுற்றுலா ஆசை அட்டியலுக்குள் தொலைந்து விட்டதே என்ற கவலை லலிதாவைப் பற்றிக்கொண்டது.

தொடர்ந்த காலங்களிலும் அப்பாவுக்கு வரும் பணமெல்லாம் காணி வாங்குவதில், வீடு கட்டுவதில், நகைகளில், ஒவ்வொரு பெண்ணினதும் கல்யாணச் செலவில் என்று கரைந்தன. வேலையும், ஊதியமும் கடமையாய், கட்டாயமாய் என்றாகி விட்டது.

லலிதா வேலை செய்யத் தொடங்கி வெகு நேரமாகியும் அப்பாவின் நினைவாகவே இருந்தாள். மாலை வேலை முடிந்து வீடு திரும்புகையிலும் அவளின் நினைவுகளின் ஓரத்தில் சோகம் இழைந்தோடிக் கொண்டிருந்தது. 'நாங்களாவது பக்கத்தில் இருந்திருந்தால் அப்பா பேரப் பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவி சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்திருப்பார். பொல்லாத நாட்டுப் பிரச்சனை அதற்குக் கூட வழியில்லாது செய்து விட்டதே.' பேதலித்த மனதுடன் காரை விட்டு இறங்கினாள்.

முன்னாலிருந்த சிறுவருக்கான விளையாட்டு மைதானத்தில் குளிரையும் பொருட்படுத்தாது சில ஜேர்மனியக் குழந்தைகள் பனிகளைச் சேர்த்து பெரிய ஐஸ் மனிதன் ஒன்றைச் செய்து விட்டு சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். இன்னும் சில குழந்தைகள் ஐஸ் கட்டிகளை உருட்டி, உருட்டி ஒருவரையொருவர் கலைத்துக் கலைத்து எறிந்தார்கள்.

அவர்களின் விளையாட்டில் லலிதா தன்னை மறந்து லயித்திருந்த அந்தக் கணத்தில் ஒரு சிறிய ஐஸ்கட்டி சில்லென்று அவளை உரசிச் சென்றது. திடுக்கிட்டுத் திரும்பினாள். நூடி ஒரு பெரிய ஐஸ் உருண்டையுடன் நின்று, லலிதாவுக்கு எறியப் போவது போலப் பாவனை காட்டினார்.

Nein... Nein... (நோ.. நோ..) லலிதா சிரித்தவாறு கத்திக் கொண்டு வீட்டுக்குள் ஓடினாள்.

அவளுக்குள் இருந்த இறுக்கம் கலைந்து மீண்டும் அவள் மனசு இலேசாகியிருந்தது. அந்த உஷாருடன் வீட்டுக்குள் மீண்டும் பம்பரமாய் சுழலத் தொடங்கினாள்.

# மே 18...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கமாட்டான் என உலகுக்குப் பறை சாற்றியது குறித்தே நமது கோபம்.

அடுத்தது கௌரி முகுந்தன் - இறுதி யுத்தம் நெருங்கும் சமயம் கருணா - பிள்ளையானுடன் அணி சேர்ந்தவர் சுசில் பிரேம் ஜெயந்த், மகிந்தவுடனும் உடன்பாடுடையவர் அவரைச் சம்பந்தன் ஐயாவுக்கு எதிராக நிறுத்தி வெள்ளையடித்ததா இக் கட்சி? முதலில் ஜீரணமாகாமல் அவஸ்தை கொடுக்கும் கூட்டமைப்பு எதிர்ப்பு என்பதைப் போக்க தமிழர் நலன் என்ற பேதியை விழுங்க வேண்டும் இக் கட்சி. இப்போது கிடைத்த வாக்குகள்கூட கூட்டமைப்புக்கு எதிரானவையே தவிர மக்களை அணி திரட்டியதால் அல்ல. கூட்டமைப்பினரும் குறிப்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் போன்றோர் தம்மைச் சிற்றரசர்களாக நினைக்காமல் உணர்வுகளுக்கு முன்னிலை கொடுத்து நிகழ்வை ஒழுங்காக நடத்த ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இதேவேளை, பத்திரிகை ஒன்று "மே 18 சரியாக ஏழு மணிக்கு வீடுகள், வர்த்தக நிலையங்கள் தோறும் பத்து நிமிடங்கள் மின் குமிழ்களை அணைத்து இருள் சூழ்ந்து இனப் படுகொலையை அறிவிப்பது. கை விளக்குகளை மட்டும் ஏற்றி இறந்தவர்களை நினைவுகூருவது. இது ஒரு மக்கள் மயமாகப் பொருத்தமான செயல் வடிவமே. முதலமைச்சர் முன் கை எடுத்து இதற்கு அழைப்பு விடுத்தால்லென்ன?" எனக் கேட்டுள்ளது. இந்த விடயம் குறித்தும் சாதகமாகப் பரிசீலிக்கலாம் எந்த விடயமும் யாரோ ஒருவரின் சிந்தனையில் எழுவதுதானே. (நேரம், கால அளவு பற்றி பொருத்தமான அளவில் முடிவெடுக்கலாம் )

மாகாண சபை முறைமையை தாங்கள் ஏற்காதபடியால்தான் தாம் தனியே நினைவு கூருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுவது சுத்த அபத்தம். அப்படியாயின் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இவர்கள் போட்டியிடமாட்டார்களா? இனப்படுகொலை என்ற தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமான சக்திகளின் எதிர்ப்பையும் மீறி மாகாண சபையில் கொண்டுவந்த வடக்கு முதல்வர் இந் நிகழ்வை தலைமையேற்று நடத்தப் பொருத்தமானவர்தான் என்பதை கட்சிக்குள்ளேயே இருக்கும் அவரது அரசியல் எதிரிகளின் மனச்சாட்சி ஒத்துக்கொள்ளும்.

எது எவ்வாறிருந்தாலும் இந்த நிகழ்வின் நோக்கம் கொச்சைப்படுத்தக்கூடாது. அன்னை பூபதியின் நினைவு நாளின் ஆரம்பத்தில் நடைபெற்றதைக் கெட்ட கனவாக எண்ணுவோம். சேர்ந்து நிற்கவிட்டாலும் தனியாக எதையும் செய்யாமலிருங்கள். தலைவர் பிரபாகரனையும் மரணித்த மக்களையும் நேசிப்பவர்கள் இதில் ஒன்றுபடுங்கள். இறுதி யுத்தம் வரை படையினருடன் ஒத்துழைத்த புளொட்டைச் சேர்த்தமைக்காக பாவ மன்னிப்புக் கோரி கூட்டமைப்பு பிரார்த்திக்கட்டும்.

யுத்த வெற்றியை சிங்களவர் பாற்சோறு பரிமாறிக் கொண்டாடினர். அந்த மகிழ்ச்சியை வெடி கொளுத்திக் கொண்டாடினார் ஒரு தமிழ்ப் பிறவி. இக் கொண்டாட்டம் மட்டக்களப்பு பற்பொடி கொம்பனிக்கு அருகாமையில் நடைபெற்றது. ராசிக் குழு, இராணுவத் துணைப்படை முதலியவற்றில் அங்கம் வகித்த இரா. துரைரத்தினம் என்பவரே அவர். இவரைத் தமது கட்சியில் மீண்டும் இணைத்தமைக்காக முள்ளிவாய்க்கால் ஆத்மாக்களிடம் மன்னிப்புக் கோரி சுடரேற்றட்டும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர். ●

# ஆரிட்டைச் சொல்லி அழ?

இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## தர்மகர்த்தாக்களோ? இல்லை அவையள் கர்மகர்த்தாக்களோ?

போன கிழமை வந்த விசியம் தொடர்பாக ஒரு ஐயர் எங்களோடை தொடர்பு கொண்டு கேட்டார் கோயில் தர்மகத்தாக்கள் செய்யிற பிழைக்கு எங்களை ஏன் திட்டி எழுதிறியள் எண்டு. நாங்கள் பிழை சரி சொல்லப்போனால் "ஐயா கதைசொன்னது காணும். வெளியே போறீங்களோ?" எண்டு சொல்லினமே ஒழிய நாங்கள் சொல்லுறதைக் காது குடுத்துக் கேப்பாரில்லை.

தடி எடுத்தவை எல்லாம் தண்டல் காரர் எண்ட மாதிரி படிப்பு வாசனை இல்லாத தெல்லாம் கோயில் முதலாளியள் எண்டும், தர்மகத்தாக்கள் எண்டும் சொல்லிக் கொண்டு தாங்கள் நினைச்ச மாதிரிக் கோயிலை நடத்த வெளிக்கிட்ட படியால்தான் எல்லாம் நாசமாப்போச்சுது. ஒரு கோயிலிலை "பூசை உப்பிடிச் செய்யிறேல்லை" எண்டு ஐயருக்கு வகுப்பெடுத்ததாம் ஒரு தர்மகர்த்தா. அப்ப எப்பிடிக் கோயில் விளங்கும்? சமயம் விளங்கும்?

உந்தக் கோயில் காரர்களுக்குத் தெரியேல்லை கோயில் கட்டிடமும், வளவு வாய்காலும்தான் தங்களுக்குச் சொந்தம் சமயமும் கடவுளும் பொதுசு எண்டு. தாங்கள் நினைச்ச மாதிரிச் சமயத்தை நடத்த ஏலாது எண்டு உவைக்குத் தெரியேல்லையே? உவைக்கு எதிரா வழக்குப்போட்டுக் கோட்டிலை நிப்பாட்டேலும் எண்டு தெரியேல்லையே?

மிகவும் கேவலப்பட்டுக் கிடக்கு இந்து சமயம். காசு இருக்குதெண்டிட்டுக் கல்லைக் கட்டிக் காவடி ஆடிச்சுதாம் குரங்கு. அதுமாதிரித்தான் காசு வைச்சிருந்தால் தாங்கள் என்னத்தையும் செய்யலாம் எண்டு நினைக்கினம் சிலபேர்.

எப்ப சமயம் காசாப் போச்சுதோ? அண்டைக்குப் பிடிச்ச தரித்திரம். கோயில் எண்ட பெயரிலை என்னென்னவோ எல்லாம் நடக்குது. சரியா சமயத்தைப் படிச்சவைக்குத் தெரியும் இப்ப அபிஷேகத் திலையும், பூசையளிலையும் சரியான முறையள் பின்பற்றப்படுகிறேல்லை எண்டு. கன கோயில்களிலை சாட்டுக்கு நடத்திறமாதிரி ஏனோ? தானோ? எண்டுதான் வேலையள் நடக்கிது.

வாற வெளி நாட்டுச் சனங்களை கடவுள், சமயம் எண்டு வெருட்டிக் காசை வேண்டி வீணாக் கட்டிடத்தைக் கட்டி, பிறகு அதைப் பராமரிக்கப்படுகிற பாட்டைக் கண்ணாலை கண்டனாங்கள்தானே? எங்கடை கோயில் ஆக்கள் வெளிநாட்டிலை இருந்து வந்த ஒருத்தரைப் பிடிச்சுக் கேட்டவையாம் கொடித்தம்பத்துக்குப் பவுணாலை கவசம் போட்டால் என்ன எண்டு?

இன்னுமொரு கோயில் காரர் எத்தினையோ கோடி செலவு செய்து ஒரு தேர் செய்து வெள்ளோட்டம் விட்டவையாம். ஆனால் அவையின்ரை கோயிலுக்குப் பக்கத்திலை இருக்கிற அறநெறிப் பாடசாலைக்கு ஆமான கதிரை மேசை இல்லையாம். கோயிலையும், கோபுரத்தையும் உயர உயரக் கட்டிறதாலை ஒரு பிரயோசனமும் இல்லை. சனத்துக்கு அந்தக் கோயிலாலை என்ன பிரயோசனம் எண்டு யோசிக்க வேணும்.

மற்ற சமய கோயில்களாலை பலவிதமான மக்கள் சேவை நடக்குது. நூற்றுக்கு நூறுவீதம் சனத்துக்குப் பிரயோசனமான விசியம் கனக்க நடக்கிது. சேர்ச்சாலை பாதர் எவ்வளவு ஆக்களுக்கு உதவியும் செய்யிறார். எல்லாவித வாழ்வாதாரத்துக்கு ஆசுவாசமாக் கனக்கச் செய்யிறார். அதை மாதிரி பள்ளியாலை முஸ்லிம்களும் தங்கடை இனத்துக்குக் கனக்கச் செய்யினம். பௌத்த விகாரையளும் பூசை பூராயம் எண்டு சனத்திட்டைக் காசு வறுகிறேல்லை. எங்கடை கோயிலிலைதான் சமயம் பெரிய அளவிலை வியாபாரமாப் போச்சுது.

பண்டுதொட்டு இருக்கிற கோயில்களைக் கட்டிப் பராமரிக்கிறது பரவாயில்லை. இது கிடக்கிற தோட்டக் காணி எல்லாத்தையும் காசு போட்டு வாங்கி கோடிக்கணக்காக் காசைச் செலவழிச்சுப் புதுசாக் கட்டிடம் கட்டி அதுவும் சைவ சமயிகள் இருக்கிற இடத்திலை ஆஞ்சநேயர் கோயிலும், வெங்கடேஸ்வரர் கோயிலும் கட்டி வியாபாரம் செய்யிற ஈக்களாலை முதலாவது சைவம் அழிஞ்சுபோகுது. சனத்துக்கும் புதுசு புதுசா ஒண்டைக்காண அவைக்கும் தலை இடிதானே?

இப்ப சனம் பரம்பரை பரம்பரையாக் கும்பிட்டிட்டு வந்த



கோயில்களைவிட்டிட்டு புதுசா வந்த கோயிக்களுக்குப் போறதை ஒரு நாகரீகமாக்கிப் போட்டினம். ஆஞ்ச நேயர் கோயிலுக்குப் போன்னான், வெங்கடேசுவரர் கோயிலுக்குப் போன்னான் எண்டு சொல்லுறதை றியோக்கு ஐஸ்கிறீம் குடிக்கப் போன்னாங்கள் எண்டு சொல்லிப் பெருமைப்படுகிற மாதிரியா சொல்லினம்.

பொறுப்பில்லாத கோயில் முதலாளிமார்களாலையும், தர்மகர்த்தாக்களாலையும் ஒண்டு எங்கடை பராம்பரியம் அழியிது. மற்றது சனத்தையும் பைத்தியக்காரராக்கினம். எங்கடை கோயில்களிலை இருந்த எத்தினை மரபு சார்ந்த விசியங்களை புனருத்தாரணம் எண்ட பெயரிலை இவை அழிச்சுப் போட்டினம். இப்ப இருக்கிற தர்மகர்த்தாக்களிலை ஆர் மரபு சாந்து சிந்திக்கினம்? சமயத்தைப் பற்றி ஆழமாச் சிந்திக்கினம்? பண்பாட்டைப் பற்றிச் சிந்திக்கினம்? அந்தளவுக்கு அறிவுள்ள ஆர் கோயிலை நடத்தினம். அந்தக் கோயில் மாதிரி எங்கடை கோயிலும் வரவேணும் எண்ட போட்டியே ஒழிய தங்களுக்கு என்ன தேவை எண்ட பக்குவம் ஆருக்கு இருக்கு?

காசு வாற பாட்டுக்குச் சமயத்தை மாத்திறது. தங்கடை எண்ணப்படி கோயிலைக் கட்டக் காசு தாற ஆக்களுக்குக் கிரீடம் வைச்சு கொண்டாடி சந்தோஷப்படுகிறதே ஒழிய அவை தாற பொருள் தர்ம வழியிலை சேத்ததோ எண்டு ஆரும் சிந்திக்கிறதில்லை. போகிற போக்கிலை சைவர்களுக்கான ஒரு சமயம் இஞ்சை இருக்குமோ எண்டு யோசிக்க வேண்டி இருக்கு.? இந்த அநியாயத்தை ஆரிட்டைச் சொல்ல அழ?

- கோளரங்கன்.

---

**உண்மைகளை...**

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெபம் ஒலித்துக் கொண்டிருக்கும்போதே கண்விழித்து விட்ட பூசிக் அவர்கள் பக்கத்திலுள்ளவரை அழைத்து தான் சொல்வதை எழுதும்படி கேட்டுக் கொண்டார். அதுவேதான் நாம் இங்கு மேற் குறிப்பிட்ட "இன்பத்துக்காகப் பிறந்தோம்" என்று ஆரம்பிக்கும் கவிதையாகும்.

கொடிய சித்திரவதை மத்தியிலும் எவ்வித வசதியும் அற்ற நிலையிலும் அவர் கிடைக்கும் சிறு சந்தர்ப்பங்களையும் பாவித்து, மலசலகூடத்தில் உபயோகிக்கும் தாளில் பழைய பென்சில் ஒன்றால் கொஞ்சம் கொஞ்சமாக "தூக்குமேடைக் குறிப்புகள்" என்ற அவரது பிரபல நூலை எழுதினார். ஒவ்வொரு தாள்களும் எழுதி முடித்தபின் ஒரு செக் நாட்டு பிரஜையான சிறைக்காவலன் மூலம் வெளியே அனுப்பப்பட்டு அது பின் பூசிக்கின் மனைவிக்கு அனுப்பப்பட்டன. அவை சிறிது சிறிதாகச் சேர்க்கப்பட்டு ஜேர்மனி, செக் நாட்டை விட்டு விரட்டப்பட்ட பின்பு புத்தகமாக அடித்து வெளியிடப்பட்டது. அப் புத்தகமானது ஹிட்லரின் வதைமுகாம்களின் கொடூரங்களை அம்பலப்படுத்துவதுடன் எவ்வித இடையூறுகளுக்கும் அஞ்சாது ஊடகவியலாளர்கள் பணியாற்ற வேண்டிய கடப்பாட்டையும் வலியுறுத்தும் ஓர் ஆவணமாகத் திகழ்கின்றது. இங்கு அது ஊடக வியலாளர்களால் மட்டுமின்றி விடுதலை விரும்பும் மக்களாலும், போராளிகளாலும் விரும்பிப் படிக்கும் நூலாக இருந்து வருகின்றது.

அத்தகைய அர்ப்பணிப்பும் தியாக நெஞ்சும் கொண்ட ஜூலியஸ் பூசிக் அவர்கள் ஜேர்மன் இரகசியப் பொலிஸாரால் தூக்கிலிடப்பட்டு கொல்லப்படுகின்றார். அவர் தூக்கு மேடைக்கு கொண்டு செல்லப்படும்போது அவரை ஸ்டெச்சரில் வைத்துத்தான் தூக்கிச் சென்றார்கள் என்பதை அறியும்போது, அவரை சாவு நேரத்தில்கூட சித்திரவதை செய்யுமளவிற்கு ஒடுக்குமுறையாளர்களால் அவர் வெறுக்கப்பட்டார் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும். அவர் தூக்கிலிடப்பட்ட அந்த நாளே உலகம் முழுவதும் ஊடகவியலாளர் நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வாறே இலங்கையிலும் சரி சர்வதேசத்திலும்சரி நேர்மையான, உள்ள விடயங்களிலிருந்து உண்மையைத் தேடி வெளிக் கொண்டுவரும் ஊடகவியலாளர்களுக்கு உயிராபத்து உட்பட பலவிதமான இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிய சிரமம் உண்டு. ஆனால் எவ்வித இடையூறுக்கும் பணிந்து போகாமல் நிமிர்ந்த நெஞ்சுடன் முன்செல்லும் எமது ஊடகவியலாளர்களையும் ஊடகப் பணியாளர்களையும், வாழ்த்தி உற்சாகமளிக்கிறோம்.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 25

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா



சிவம், அவளின் முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தான். தன்னுடன் படிப்பில் போட்டி போடும் புஷ்பமலர் தான் அவள் என்பதை அவன் இனங்கண்டு கொண்டான். ஏறக்குறைய பத்து வருடங்கள் அவளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அவனால் அவளை உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை என்பதை அவன் புரிந்து கொண்டான்.

"மடுவில ஆமியின்ரை ஷெல்லடியிலை உங்கடை, அம்மா, அப்பா, தங்கச்சியெல்லாம்..." சிவம் வார்த்தைகளை முடிக்கவில்லை.

அவள், "ஓமோம். அந்த புஷ்பமலர் நான் தான்... அப்பிடியே அந்தப் பிரச்சினையிலை காயப்பட்டு அங்காலை கொண்டு போனவங்கள். பிறகு சுகமானாப்போலை சொந்தக்காரரோடை அங்கயே தங்கீட்டன்." என்றாள்.

ரணகோஷ காலகட்டத்தின் போது நடந்த அந்தக் கொடூரம் சிவத்தின் நினைவில் வந்தது. அந்தக் காட்சியை மீட்டிப்பார்க்கும்போது இப்போதும் அவனின் நெஞ்சில் நெருப்பு எரிந்தது, வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேற முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக முன் செல்ல முடியவில்லை. அந்த நிலையில் அவர்கள் தங்கள் முன்னேற்ற வியூகத்தை வவுனியா - மன்னார் வீதியை நோக்கி திருப்பினார்கள்.

ரணகோஷ படை நடவடிக்கை மூலம் நெலுக்குளத்தை உடைத்துக்கொண்டு படையினர் பூவரசங்குளம் வரை முன்னேறி விட்டனர். அங்கிருந்து மடு நோக்கி நகர முயன்ற இராணுவம் விடுதலைப்புலிகளின் பதிலடிகாரணமாக ஒரு அடி கூட மேற்கொண்டு நகர முடியாமல் திண்டாடியது. அந்த நிலையில் பூவரசங்குளம் தம்பனை ஆகிய கிராமத்து மக்கள் இடம்பெயர்ந்து மடுவில் தஞ்சமடைந்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் பண்டிவிரிச்சானை நோக்கி அடுத்தடுத்து எறிகணைகள் வந்து விழத் தொடங்கின. அதன் காரணமாக மடுவில் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்திருந்த மக்கள் அச்சமடைந்து மடுமாதா தேவாலயத்திற்கு அருகில் இருந்த சின்னக் கோவிலில் அடைக்கலம் புகுந்தனர்.

பண்டிவிரிச்சானை நோக்கி இடம்பெற்ற தொடர் எறிகணை வீச்சு ஓய்ந்து மக்கள் சற்று நிம்மதியடைந்த வேளையில் தான் அந்தக் கொடூரம் நிகழ்ந்தது. பறந்து வந்த இரு எறிகணைகளில் ஒன்று சின்னக் கோவிலின் உள்ளேயும் மற்றையது வாசலிலும் வீழ்ந்து வெடித்தன. பெரும் மரண ஓலம் எங்கும் எழுந்தது. உடல்கள் பிய்த்தெறியப்பட சீறிய இரத்தம் ஆலயச் சுவர்களில் தெறித்துப் பரவின. பிணங்களும் குற்றுயிராய்க் கிடந்த மக்களுமாய் ஆலயமும் ஆலய வளாகமும் ஒரு போர்க்களம் போல் காட்சியளித்தன.

"மாதாவே.. ஏன் எங்களுக்கு இந்தக் கொடுமை", என் யாரோ ஒரு பெண் அலறிய குரல் ஆலயச் சுவர்களில் மோதி எதிரொலித்தது. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டனர். உடல்கள் தலைவேறு, கை கால்கள் வேறு எனச் சிதறிப் போய்க் கிடந்ததால் இறந்தோரின் தொகையைக் கூடச் சரியாகக் கணக்கெடுக்க முடியவில்லை. ஏராளமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

பாடசாலைகள், ஆலயங்கள் என மக்கள் பெருமளவு கூடியிருக்கும் இடங்களை இலக்கு வைக்கும் இலங்கை இராணுவத் தின் இன அழிப்புப் போர் முறைக்கு, மடுவளாகமும் பலியாகி இரத்தக்குளமாகியது. அந்தச் சம்பவத்தில்தான் புஷ்பமலரின் தாய், தந்தையும் தங்கையும் அடையாளம் காணமுடியாதவாறு சிதறிப் பலியாகினர். புஷ்பமும் படுகாயமடைந்து செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

அந்த நினைவுகள் சிவத்தின் நினைவில் மோதியபோது அவன் தன்னையறியாமலேயே தன் பற்களை நெருமிக் கொண்டான். சிவம், "மடுவிலை உங்கடை பெற்றோர் சகோதரியைக் கொண்டாங்கள். பூவரசங்குளத்திலை உங்கடை மச்சாளை கெடுத்து அவவைச் சாக வைச்சாங்கள். பிறகு இவரையும் உங்களையும் பிள்ளையளையும் கொல்லப் பாத்தாங்கள். இவங்களை...", என்று கோபமாக கூறிவிட்டு இடை நிறுத்தினான்.

திடீரென சற்றுத் தொலைவில் கேட்ட பெரும் வெடியோசை அவர்களை அதிர வைத்தது. அவர்கள் மேல் காற்று ஏற்படுத்திய உதைப்பின் அதிர்வில் புஷ்பம் தண்ணீர்க் குடத்தை கீழே போட்டு விட்டாள்.

குண்டைவீசிய விமானம் பேரிரைச்சலுடன் மேல் எழுந்தது. இரு புறங்களிலிருந்து பறந்துவந்த விமானங்கள் குண்டுகளை வீசிவிட்டு மேலெழுந்தபோது தரையிலிருந்து விமான எதிர்ப்பு பீரங்கிகள் முழங்கத்தொடங்கின. உடனடியாகவே இரு கிபிர் விமானங்களும் வான்பரப்பை விட்டு மறைந்தன.

பெரியபண்டிவிரிச்சான் பாடசாலைப் பக்கம் புகைமண்டலம் எழுந்தது. இப்போதெல்லாம் விமானத் தாக்குதல்கள் மக்களுக்குப் பழகிப்போய்விட்டன. ஒவ்வொரு வீடுகளிலும் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டிருந்தன. விமானங்கள் போய் சில நிமிடங்களிலேயே இயல்பு நிலை வந்துவிடும். புஷ்பம், புகைமண்டலம் எழும்பிய திசையைப் பார்த்து ஒரு பெரு மூச்சுடன், "பாருங்கோ சிவம்.. கோயிலுக்கு ஷெல் அடிச்சு எங்கடை குடும்பத்தையே அழிச்சாங்கள், இப்ப பள்ளிக்கூடங்களுக்கு விமானத் தாக்குதல் நடத்தி பிள்ளையளைக் கொல்லத் திரியிறாங்கள்" என்றாள்.

பண்டிவிரிச்சான் பாடசாலையில் முன்பொருமுறை புக்காரா விமானம் பரீட்சை மண்டபத்தின் மீது குண்டு வீசியது சிவத்தின் நினைவில் வந்து போனது. "நக்கிற நாய்க்கு செக்கென்ன? சிவலிங்கமென்ன எண்டு சொல்லுவாங்கள். இன அழிப்பு எண்டு வெளிக்கிட்டவங்கள் குழந்தையள், முதியவர்களது எண்டு பாக்கவே போறாங்கள்?", என்றான் சிவம்.

அப்போ பண்டிவிரிச்சான் பக்கமிருந்து வேகமாகச் சைக்கிளில் வந்த ஒருவரிடம் சிவம், "ஐயா.. குண்டு எவடத்திலை விழுந்தது?", எனக் கேட்டான்.

"அது பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலை உள்ள ஒரு கைவிடப்பட்ட வீட்டிலைதான் விழுந்தது. ஆக்களுக்கு ஒரு சேதமும் இல்லை. இரண்டு பசு மாடுகள் தான் செத்துப் போச்சுது" எனச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் அவர்.

அது ஏற்கனவே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இயங்கிய வீடு. இப்போது அந்தக் காரியாலயம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இயங்கிய இடம் அது என்பது எங்கள் மக்களில் ஒருவராலேயே எதிரிக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நினைத்தபோது சிவத்தின் மனதில் வேதனை பரவியது. எனினும் அந்தத தகவல் மிகவும் பிந்திப் போய்ச் சேர்ந்துள்ளது என்பதை நினைத்து அவன் சற்று ஆறுதலடைந்தான்.

சிவம் கந்தாசாமியிடமும் புஷ்பத்திடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். புஷ்பம் நன்றி கலந்த ஒரு புன்னகையுடன் விடைகொடுத்தாள்.




- நோக்கன்

ஓர் இனம் தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவது அவர்களின் உரிமை. ஆனால் அதுவே ஒரு பெரிய அரசியல் பின்னணியைக் கொண்டதாகவும், அரசியல் சூழ்ச்சியாகவும் இருக்குமானால் அது சிந்திக்கப்பட வேண்டிய தொன்று.

# அபாயா அபாய அரசியல்

முஸ்லிம், தமிழர் என்று வாழ்ந்தபோது அடக்குமுறைக்கு எதிராக அவர்கள் தமிழர்களுடன் கைகோத்துச் செயற்பட்டது அந்தக்காலம். ஆனால், இன்று தாங்கள் ஒரு புறம்பான இனமென்று அரசியலுக்காகச் சொல்லப் புறப்பட்டனரோ அன்றே அவர்கள் தமிழ்த் தரப்புடன் பேரம் பேசத் தொடங்கி விட்டனர். முஸ்லிம்களைத் தமிழர்களில் இருந்து பிரித்து மூன்றாம் தரப்பாகத் தங்களை அடையாளப்படுத்திய முஸ்லிம் தலைமைகளின் நயவஞ்சகத்துக்கு இரையாகிப் போனவர்கள், தொடர்ந்தும் அவர்களின் அரசியல் இலாபத்துக்காகப் பிரித்தாளப்படுகின்றனர்.

ஓர் இனம் தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவது அவர்களின் உரிமை. ஆனால் அதுவே ஒரு பெரிய அரசியல் பின்னணியைக் கொண்டதாகவும், அரசியல் சூழ்ச்சியாகவும் இருக்குமானால் அது சிந்திக்கப்பட வேண்டியதொன்று. பெரும்பான்மை சிறுபான்மையை விழுங்கி ஏப்பமிடுவதென்ற கதையைத்தான் நாம் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஒரு சிறுபான்மை இனம், தம்மை சிறுபான்மை இனம் என்று சொல்லிக் கொண்டு இருக்கின்ற இன்னொரு இனத்தால் பிரச்சினைக்கு உள்ளாக்கப்படுவது இலங்கையில்தான் நடக்கும் விடயம். கிழக்கு மாகாணத்தில் தமிழர் தரப்பிலிருந்து வரும் செய்திகள் மிகவும் மனவருத்தத்தைத் தரவல்லனவாக உள்ளன.

கண்டிக் கலவரத்தில் தாங்கள் சிங்கள இனத்தால் தாக்கப்பட்டதாகவும், தங்கள் சொத்துக்கள் சூறையாடப் பட்டதாகவும் சொல்லும் முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத் தமிழ் தரப்புக்குத் தலையிடியாகத் தாம் இருப்பதைக் கொஞ்சம் கூடச் சிந்தித்துப் பார்க்கிறார்களா? என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனை காணி அபகரிப்புகள், இந்து மயானத்தில் அத்துமீறித் தமது பிணங்களை அடக்கம் செய்தல், போரால் இடம்பெயர்ந்தவர்களின் காணிகளை இராணுவம் போல் அபகரித்து இன்னும் விடாதிருத்தல், தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்களும், குடியிருப்புகளும், கிழக்கு மாகாணத்தில் தொன்று தொட்டு வாழ்ந்துவரும் தமிழ் சமூகத்திற்குச் சிங்கள் மக்களால் ஏற்பட்ட நெருக்கடிகளைவிட முஸ்லிம் இனத்தவர்களால் ஏற்பட்ட நெருக்கடிகளே அதிகம் எனலாம்.

1990க்கு முன் இலங்கையில் முஸ்லிம் பெண்கள் முக்காடு போட்டு நடப்பதைத்தான் பார்த்திருக்கிறோம். இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அபாயா இடையிட்டு வந்த விடயம். பரவாயில்லை. அது அவர்கள் பிரச்சினை. ஆனால் அதுவே ஒரு பல்லினச் சமூகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தக் காரணமாக இருக்குமானால் அது பற்றி நாம் சிந்திக்க வேண்டி யது அவசியம். அபாயா சமூகத்தில் ஒரு ஸ்திரமற்ற நிலையை உருவாக்கி இருக்கிறது. திருகோணமலை இந்துக் கல்லூரியில் நடந்த ஒரு சம்பவத்தில் அதிபர் அச்சுறுத்தப்பட்ட பின் அது பூதாகரமாகி சமூகவலைத்தளங்களில் காரசாரமான விவாதத்திற்குள்ளான நிலையில், தமிழ் பெண்கள் அணியும் சேலை பற்றியும், அதை அணிபவர்கள் பற்றியும் முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்ட கேவலமான உரையாடல்களாலும் சேலை கட்டுகின்ற சிங்கள, தமிழ் மக்கள் மிகவும் மனம் நொந்துபோய் இருக்கிறார்கள். இது அவர்கள் பெண்கள் பற்றி எவ்வாறான மனநிலையில் இருக்கிறார்கள் என்பதையே காட்டுக்கின்றது.

பன்முகச் சமூகங்கள் வாழும் இந்த நாட்டில் பல விடயங்களில் பொதுவான கொள்கைகளை வரையறுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருப்பதாகவே இந்த அபாயா விடயம் சுட்டிக் காட்டுகிறது. மேற்குலக நாடுகளில் இன்று பல சட்ட நடைமுறைகளுக்குச் சவாலாக இருப்பதைக் காணலாம். அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டிய பல நடைமுறைகளில் அபாயா ஒரு சிக்கலுக்குரிய விடயமாகவே தோன்றுகிறது. ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்கின்ற பல நாடுகளும் அபாயாவை பற்றிப் பேசி இருக்கின்றன.

எனது மொழி, எனது மதம், என்னுடைய சமூக அடையாளங் கள் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் ஒரு பன்முகச் சமூக நடைமுறைகளுக்குள், பொது வெளியில் இவற்றால் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுமாயின் அவை பற்றிச் சிந்திக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து ஒரு பொது வரையறுக்குள் நாம் வரவேண்டிய தேவை உண்டென்பதையே தற்போது ஏற்பட்டுள்ள சம்பவம் எமக்கு எடுத்துரைக்கிறது.

திருகோணமலை இந்துக் கல்லூரியில் நடந்த விடயம் இதுதான்:

முதலில் இரண்டு முஸ்லிம் ஆசிரியைகள் அங்கு படிப்பித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சேலையுடன்தான் வந்தனர். சில காலத்தின் பின்னர் இன்னும் இரண்டு முஸ்லிம் ஆசிரியைகள் வந்து சேர்ந்தனர். அவர்களும் சேலை உடுத்தே பாடசாலைக்கு வந்திருந்தனர். அண்மையில் முஸ்லிம் ஆசிரியை ஒருவர் புதிதாக வந்தார். அவர் அபாயாவுடன் வந்திருந்தார். பாடசாலை அதிபர் பாடசாலைச் சட்ட திட்டத்தை விளங்கப்படுத்திய பின் தனக்கு இரண்டு - மூன்று நாட்கள் அவகாசம் கேட்டிருந்தார். அதற்குப் பாடசாலை நிர்வாகமும் அனுமதி அளித்திருந்தது. இவர்கள் ஐவரும் சிறிய வகுப்புக்கு கற்பிக்கும் ஆசிரியைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த அவகாசம் முடிந்த ஒருநாளில் ஐந்து ஆசிரியைகளும் அபாயாவுடன் வரத்தொடங்கினர். இதையடுத்தே பிரச்சினை வெடித்தது. அதுவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எப்படி தன்னிச்சையாகப் போராடத் தொடங்கினார்களோ? அப்படியே பெற்றோர்கள் இந்த அபாயா நிலைமைக்கு எதிராகவும் போராடினார்கள். இது திட்டமிட்ட போராட்டம் என்று முஸ்லிம்கள் சொல்வது போல நடைபெறவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கை வளர்க்கும் மாற்றுத் திறனாளி

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 11

நெரிசல் நிறைந்த நடைபாதை ஒன்றினூடாகப் பயணிக்க நேர்ந்தபோது, பாதையின் குறுக்கே தனது ஊனமுற்ற காலை நீட்டி, போவோர் வருவோருக்கெல்லாம் அதைக் காட்டி அழுது ஒப்பாரி வைத்தபடி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான் ஒருவன். போர் காலத்தில் காலை இழந்ததாக அடிக்கடி சொல்லிக் கொண்டான் அவன். சாதாரணமாகப் பார்த்துப் பரிதாபப்படுவதைப்போல நான் அவனையும், அவனது நிலையையும் எண்ணிப் பரிதாபப்பட்டுக் கொண்டேன்.




யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியில் யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கின்ற சிவலிங்கப் புளியடியில் இயற்கையாகத் தயாரித்த பழ ரச வகைகளை விற்கும் கடை உரிமையாளர் முருகன் ரஞ்சன் முத்துக்குமாரை சந்திக்கும் வரைக்கும் அந்த நடைபாதையில் பிச்சை எடுப்பவர் பற்றி ஒரு பரிதாபகரமான சிந்தனையே என்னுள் இருந்தது.

போர்க் காலத்தில் மிதிவெடியில் சிக்கி ஒரு காலை முற்றாக இழந்து விட்டவர் முருகன் ரஞ்சன் முத்துக்குமார். தனக்குக் கால்தான் ஊனமே ஒழிய மானசீகமாக எந்தவித ஊனமும் இல்லை என்றதை நிரூபிக்கின்ற வகையில் ஒரு சாதாரண மனிதனைக் காட்டிலும் பன் மடங்கு செயற்பாட்டுடன் அவர் இயங்குவதைப் பார்க்கும்போது, காய்ந்து, மெலிந்த தேகத்தைப் போலல்லாது, மொழு மொழுவென பளிச்சிட்ட சரீரத்தை உடைய நடைபாதைப் பிச்சைக்காரன் தனக்கு ஏற்பட்ட ஊனத்தை முதலீடாகக் கொண்டு ஒரு வியாபாரத்தை நடத்துவது எனக்குப் புரிந்தது.

முருகன் ரஞ்சன் முத்துக் குமாரைப் பார்த்தபோது அந்த நடைபாதைப் பிச்சைக்காரன் ஒரு சுயநம்பிக்கையற்ற சோம்பேறி யாகவே எனக்குத் தெரிந்தான்.

"எனது முதலீடு, சுய முயற்சியில் கொண்ட நம்பிக்கைதான்" என்று சொல்லும் முருகன் ரஞ்சன் முத்துக்குமார் தன்னைப்போல மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என விரும்புகிறார். கூர்ந்து கவனித்தாலே ஒழிய அவரை ஊனமுற்றவர் என்று சொல்வது கடினம். பணம் பெறுவது தொடக்கம், வாடிக்கையாளர்களை வரவேற்று உபசரித்து சிற்றுண்டி பரிமாறுவது, வந்தவர்கள் விருப்பத்துக்கேற்ப பானங்களை தயாரித்து வழங்குவது என்று அனைத்துப் பணிகளையும் தனது பணியாளர்களோடு சேர்ந்து கவனிக்கிறார் அவர்.

போக்குவரத்துக்காக ஒரு மோட்டார் சைக்கிளை வைத்திருக்கும் அவர் மருதனார்மடம், சுன்னாகம், யாழ்ப்பாணம் சந்தைகளுக்குச் சென்று பழ வகைகளைக் கொள்முதல் செய்து வருகிறார். தென் பகுதியிலிருந்து பழ மொத்த விற்பனையாளர்கள் அவரின் வாசல் தேடி வருமளவிற்கு அவர் பிரபலமாயிருக்கிறார். அது மட்டுமல்ல தனது வியாபார நிலையம் தொடர்பான வெளி வேலைகள் அத்தனையையும் கவனிப்பவரும் அவரே.

*1965* இல் அம்பாறையின் - பொத்துவில் கிராமத்தில் பிறந்து. சிறுவயதிலேயே மென்பானங் களைத் தயாரித்து விற்பனை செய்யும் ஒரு இஸ்லாமியரிடம் வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது.



"ஏழு வருடங் கள் அவருடன் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தில் இயற்கையாகப் பழங்களிலிருந்து சுவைமிக்க மென் பானங்களை செய்வது எப்படி என்றதைக் கற்றுக் கொண்டேன். போர்க்காலத்தில் எனக்கு வயது இருபது இருக்கும், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டேன்.

விடுதலையாகி வந்த பின் 1990 இல் எதிர்பாராத விதமாக மிதிவெடியில் சிக்கி எனது காலை இழந்தேன். அப்போது எமது பகுதியில் நிர்வாகப் பொறுப்பிலிருந்த விடுதலைப் புலிகளின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சத்திரசிகிச்சை செய்து கொண்டேன். பின்னர் ஜெய்ப்பூர் நிறுவன உதவியுடன் செயற்கைக்கால் ஒன்றைப் பொருத்திக் கொண்டேன்" என்று சொல்லும் முருகன் ரஞ்சன் முத்துக்குமாரிடம் நான்குபேர் பணிபுரிகிறார்கள்.

பல இன்னல்களுக்கு மத்தியில் விடாமுயற்சியால் சாண் ஏற முழம் சறுக்குவதைப்போல பல சவால்களுக்கு முகம் கொடுத்துத் தற்போது எந்தவித இரசாயனக் கலப்பு மற்ற இயற்கைப் பானங்களை விற்பனை செய்கின்ற கூல் பார் ஒன்றை நடத்திவரும் முருகன் ரஞ்சன் முத்துக்குமாரின் கடையை நோக்கி வருகின்ற இயற்கை பழரசப் பானப் பிரியர்களில் நீண்டகால வாடிக்கையாளர்கள் பலர் இருக்கின்றனர்.

வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்றவாறு பழரசங்களை உடனுக்குடன் தயாரித்து வழங்குகிறார். இனிப்பை இட வேண்டிய அளவைக் கேட்டு அவர்கள் ஆரோக்கியத்தையும் கவனிக்கிறார். அத்துடன் அந்தக் கூல்பாருக்கு முன்னால் பழக்கடை ஒன்றையும் நடத்தி வருகிறார். சதா இயங்கிக் கொண்டிருக்கும் இவர் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு முன்னோடியாக இருப்பதோடு இயற்கை உணவு விற்பனைகளை ஊக்குவிப்பவராகவும் இருக்கிறார்.


தன்னைப் போன்று முன்னேறத் துடிப்பவர்களுக்கு ஒரு தூண்டு கோலாக இருப்பதோடு எல்லாவிதமான உதவிகளையும் வழங்கிவருகிறார். மொத்தத்தில் ஒரு நல்ல மனிதராக இருக்கிறார். அதனாலேயே அவருக்கூடாகப் பல நலமான விடயங்கள் சாத்தியமாகின்றன. இவர் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் ஒரு நல்ல உதாரணமாகவும் இருக்கிறார். இவரைப் பின்பற்றக்கூடியதொரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

இவரை எமக்கு அறிமுகம் தந்த மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையமான கருவிக்கு எமது வாழ்த்துக்கள்...!


காட்டேரி படத்தின் நாயகியாக ஓவியா ஒரு வருடத்துக்கு முன்பு அறிவிக்கப்பட்டார். ஆனால் வரலட்சுமி, சோனம் பாஜ்வா ஆகியோர்தான் இப்போது நடிக்கின்றனர்.

ஓவியா படத்தில் ஒப்பந்தமானபோது 10 இலட்சம் இந்திய ரூபா சம்பளமாக வாங்கினார். இப்போது 50 இலட்சம் வாங்குகிறார். இதனாலேயே அவர் கழற்றி விடப்பட்டார் எனக் கூறப்பட்டது.

ஆனால் 'சம்பளம் பிரச்சினை இல்லை. ஓவியாவின் முக்கியத்துவமும் குறைக்கப்பட்டதாலேயே விலகினார் என்கிறது ஓவியா தரப்பு.








கதைக்கேற்ப உடலை வருத்தி நடிப்பவர் விக்ரம். சேது, பிதாமகன், காசி, அந்நியன், ஐ படங்கள் விக்ரம் உடலை வருத்தி நடித்த படங்கள்தான்.


மகாவீர் கர்ணா வரலாற்றுப் படத்தில் நடிக்கவுள்ளார் விக்ரம். கர்ணன் பாத்திரத்துக்கு ஏற்ப உடல்கட்டை மாற்றுகிறார் விக்ரம்.

இதற்காக உடற்பயிற்சிக்கூடத்தில் சுமார் 5 மணித்தியாலத் துக்கும் மேலாகத் தினமும் பயிற்சி செய்கிறார் விக்ரம்.

பாகுபலியில் போர் வீராங்கனையாக தமன்னா நடித்திருந்தார். 2 ஆம் பாகத்தில் அவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாததால் கவலையில் ஆழ்ந்திருந்தார்.

இந்நிலையில் சிரஞ்சீவி, அமிதாப்பச்சன் இணைந்து நடிக்கும் செரா நரசிம்மாரெட்டின படத்தில் போர் வீராங்கனையாக தமன்னா நடிக்கிறார்.

இந்தப் படத்தின் நாயகியாக நயன்தாரா நடிக்கிறார். இரண்டாவது நாயகியாகவே தமன்னா நடிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



'கா' படத்தில் ...ட்டுயிர்களை படம் ...டிப்பவராக நடிக்கிறார் ...ன்ட்ரியா.

நாயகியை மையமாகக் ...காண்டு உருவாகும் இந்தப் ...ம் க்ரைம் த்ரில்லர் ...தையாக உருவாகியுள்ளது.

நாஞ்சில் இயக்கத்தில் ...ருவாகும் இந்தப் படம் ...ந்தமான் மலைக்காடுகளில் ...மாகிறது.

...தனிடையே ஆன்ட்ரியா ...டித்த விஸ்வரூபம் 2 ...வளியாகவுள்ளது.



# விடைபெறும் நாயகன்

பார்சிலோனா அணித்தலைவரான அன்ரெஸ் இனியஸ்ரா நடப்பு வருட லாலிகா தொடர் முடிந்ததும் கழகத்திலிருந்து விலக உள்ளதாக சில தினங்களுக்கு முன்னர் அறிவித்துள்ளார். சீன சுப்பர் லீக் தொடரில் கலந்து கொள்ளும் முகமாகவே அவர் பார்சிலோனாவை விட்டு விலகவுள்ளார். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 33 வயதான இனியஸ்ரா 12 வயதிலேயே பார்சிலோனாவின் இளைஞர் அக்கடமியில் இணைந்து கொண்டவர். 2002 ஆம் ஆண்டு தனது முதற்போட்டியை பார்சிலோனா சிரேஷ்ட அணிக்காக விளையாடத் தொடங்கி 16 ஆண்டுகளில் 669 போட்டிகளில் விளையாடியுள்ளார். கடந்தவாரம் பார்சிலோனா வென்ற கோபா டெல்ரே கிண்ணத் தொடரோடு 31 வெற்றிக் கிண்ணங்களை வென்ற பார்சிலோனா அணியில் இனியஸ்ரா இடம்பெற்றுள்ளார். தற்போது நடைபெற்று வரும் லாலிகா தொடரிலும் பார்சிலோனா கிண்ணம் வெல்வது உறுதியாகி உள்ள நிலையில் வெற்றிக்களிப்புடனேயே அவர் விலகினாலும் 'இது ஒரு கடினமான தருணம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இனியஸ்ரா 2008, 2012 யூரோ கிண்ணம் வென்ற ஸ்பெயின் அணியில் இடம்பெற்றதோடு 2010 ஆம் ஆண்டு நெதர்லாந்து அணிக்கெதிராக நடைபெற்ற உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் ஒரு கோல் அடித்து ஸ்பெயின் முதன் முறை கிண்ணம் வெல்வதற்கும் காரணமாக விளங்கியவர். அந்தவகையில் 2018 உலகக் கிண்ண ஸ்பெயின் அணியிலும் இடம்பெற்றுள்ள இனியஸ்ரா இந்த உலகக் கிண்ணப் போட்டிகளோடு சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார் எனவும் கருதப்படுகின்றது.

# கனவு மெய்ப்படவேண்டும்


அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் எதிர்வரும் 2028 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் இடம்பெறுமென ஐ.சி.சி. நம்பிக்கை வெளியிட்டுள்ளது. 1900 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் மட்டுமே கிரிக்கெட் இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் கடந்த 118 வருடங்களாக கிரிக்கெட் போட்டிகள் ஒலிம்பிக்கில் சேர்க்கப்படவில்லை. கிரிக்கெட் போட்டிகள் அதிகளவு பிரபலமாகாத காலப்பகுதியிலேயே ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெற்றிருந்த கிரிக்கெட் இன்று அதைவிட பிரபலமானதோடு அதிகமான நாடுகளில் விளையாடப்பட்டு வருகின்ற போதும் ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெறாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதே.

இந்நிலையில் 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் கிரிக்கெட் சேர்க்கப்படுவதற்கு எந்தவொரு உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை. ஆனாலும் அதை நோக்கிய பயணத்துக்கான முதற்காலடியை ஐ.சி.சி. தற்போது எடுத்துள்ளது. அந்தவகையில ஐ.சி.சியில் அங்கத்துவம் வகிக்கும் 104 நாடுகளும் விளையாடும் இருபதுக்கிருபது போட்டிகளுக்கு ஐ.சி.சி. சர்வதேச அங்கீகாரம் அளித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமே.

ஏனென்றால் இந்தவிடயத்தில் பலநாடுகள் ஒன்றிணைந்து அழுத்தம்கொடுக்கும் பட்சத்திலேயே ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டையும் சேர்ப்பதற்கான வாய்ப்பு அதிகமாகும். குறுகிய நேரமும் ரசிகர்களின் அதிக ஈடுபாடும் இருபதுக்கிருபது போட்டிகளுக்கே இருப்பதனால் ஒலிம்பிக் நோக்கில் அப்போட்டிகளுக்கு அனுமதி வழங்கியமை சரியெனத்தோன்றினாலும் ஒலிம்பிக்கை மட்டும் கருத்திற்கொண்டு வழங்கப்படும் இந்த அங்கீகாரம் கிரிக்கெட்டின் பாரம்பரியமான டெஸ்ட் போட்டிகளின் மகத்துவத்தை அந்த நாடுகளுக்கு உணர்த்தாமல் செய்துவிடுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# பரீட்சித்துப் பாருங்கள்

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 2015 ஆம் ஆண்டு முதலாவது பகலிரவு டெஸ்ட் போட்டி அவுஸ்ரேலிய - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் அடிலெயிட் மைதானத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் வேறு சில நாடுகள் பகலிரவுப் போட்டிகளில் விளையாடினாலும் இந்திய அணி இதுவரை ஒரு பகலிரவு டெஸ்ட் போட்டியிலும் விளையாடவில்லை. இந்த ஆண்டு இறுதியில் அவுஸ்ரேலிய , மேற்கிந்தியத்தீவுகள்



அணிகளுடனான டெஸ்ட் தொடரின் பொழுது ஒரு போட்டியை பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடத்துவதற்கு திட்டமிடப் பட்டிருந்தாலும் இன்னமும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பின்னடிப்பதற்கான பிரதான காரணம் பகலிரவு டெஸ்ட் போட்டிகளில் பயன்படுத்தப்படும் இளஞ்சிவப்பு நிறப் பந்துகளில் விளையாடிய அனுபவம் இந்தியாவிற்கு போதியளவு இல்லாததாலேயே.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான கபில்தேவ், இந்தியா பகலிரவுப் போட்டிகளைச் சொந்த மைதானத்தில் விளையாட வேண்டுமாக இருந்தால் அடுத்த வருட ஐ.பி. எல். போட்டிகளில் இளஞ்சிவப்பு நிறப்பந்துகளில் விளையாட வேண்டும் எனக்கூறியுள்ளார். அது பகலிரவு டெஸ்ட் போட்டிகளுக்கான நல்லதொரு பயிற்சியாக அமையும். துணைக் கண்ட நாடுகள் அதிக வெப்ப நாடுகளாக இருப்பதனால் பகலிரவு டெஸ்ட் போட்டிகள் நடத்துவது பயனுடையதே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் தொழில் நுட்பரீதியாகவும் ரசிகர்களை ஈர்ப்பதற்காகவும் பல்வேறு புதுமைகள் புகுத்தப்பட்டு வரும் நிலையில் எதிர்காலத்தில் இளஞ்சிவப்பு நிறப் பந்துகளில் போட்டிகள் நடைபெற்றாலும் ஆச்சரியமில்லை. என்றாலும் கோடிகள் புரளும் ஐ.பி.எல். போட்டிகளை பரிசோதனைக் களமாகப்பயன்படுத்த ஐ.பி.எல். நிர்வாகம் விரும்புமா? என்பது சந்தேகமே. அதைவிட ரஞ்சிக் கிண்ணம் போன்ற உள்ளூர் தொடர்களில் பரீட்சார்த்தமாக பகலிரவு டெஸ்ட் போட்டிகளை நடத்துவதன் மூலமே அதிக பயன் கிடைக்கும் எனக் கருதப்படுகின்றது.

# முடிவு அவர் கையில்!




ஆப்கானிஸ்தான் அணி தனது கன்னி டெஸ்ட் போட்டியை இந்திய அணியுடன் அடுத்த மாதம் 14 ஆம் திகதி பெங்களூரில் விளையாடவுள்ளது. ஆனாலும் இந்த டெஸ்ட் போட்டியில் விராட் கோலி விளையாட மாட்டார் என்று கருதப்படுகின்றது. ஏனென்றால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரைக் கருத்திற்கொண்டு பிராந்திய அணியான சர்ரே அணிக்காக விளையாட கோலி அதேகாலப் பகுதியில் ஒப்பந்தமாகி உள்ளார். இது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவுக்கு இந்த டெஸ்ட் போட்டி பத்தோடு பதினொன்றாக இருக்கலாம். ஆனால் ஆப்கானிஸ்தானுக்கு இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு போட்டியாகும். எந்தவொரு வீரரையும் குறிப்பிட்ட போட்டியில் விளையாடுமாறு கட்டாயப்படுத்த முடியாதுதான். என்றாலும் இந்தப் போட்டியில் கோலி கலந்து கொள்ளமுடியாது போனால் போட்டி மீதான எதிர்பார்ப்பு குறைவதோடு ஆப்கானிஸ்தானின் கன்னி டெஸ்ட் போட்டியையும் அவமதிப்பது போலாகி விடும். இதையடுத்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் தற்போது கோலியின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்துள்ளது.

ஆனாலும் இங்கிலாந்து மண்ணில் இந்திய அணியின் கடந்த காலப்பெறுபேறுகள் சிறப்பாக இல்லாத காரணத்தாலேயே குறிப்பிட்ட சில வீரர்களை பிராந்திய போட்டிகளில் விளையாடுவதற்கு முன்னர் அனுமதித்ததும் இவர்கள்தான். இங்கிலாந்துத் தொடருக்கான போட்டி அட்டவணை எப்போதோ தயாரிக்கப்பட்டாலும் ஆப்கானிஸ்தான் டெஸ்ட் போட்டி பிற்பட இடைச்செருகலாக ஒழுங்குபடுத்தப்பட்டதாலேயே இந்தக் குழப்பம் ஏற்பட்டிருந்தது. எது எப்படியோ சர்ரே அணிக்காக கோலி விளையாடுவதில் தடையில்லாவிட்டாலும் ஆப்கானிஸ்தான் போட்டி ஆரம்பமாகும் பொழுது அதன் முக்கியத்துவம்உணர்ந்து, கழகத்தின் அனுமதி பெற்று, இந்தப் போட்டியில் அவர் கலந்து கொள்ள வேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பாக உள்ளது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 05.05.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.